யாக்கோபு - முன்னுரை

காலமும் இடமும்

கிபி. 45 ஆம் ஆண்டில் முதலாம் கிறிஸ்தவ ஆலோசனைச் சங்கத்திற்கு (கிபி. 51) முன்பாக எருசலேமிலிருந்து இந்த நிருபம் எழுதப்பட்டது.

ஆசிரியர்

யாக்கோபு - இயேசு கிறிஸ்துவின் சகோதரர்.

மையக்கருத்து

1. யூதமார்க்கத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளாகி சிதறிப் போனவர்கள் ஆதித்திருச் சபையை ஆரம்பித்தார்கள். அவர்க ளுக்காக எழுதப்பட்டிருக்கும் கிறிஸ்தவ உபதேசம். (யாக் 1:1; அப் 2:5-11)

2. யாக்கோபு எழுதின நிருபம் யூதமார்க்கத்தாருக்கே விசேஷமாக எழுதப்பட்டிருக்கிறது. மத்தேயு எழுதின சுவிசேஷம் யூதருடைய சுவிசேஷம் என்று அழைக்கப்பட்ட போதிலும் யாக்கோபு நிருபமே யூதமார்க்கத்தாருக்கு விசேஷித்த செய்திகளைச் சுமந்து செல்கிறது. யூதா எழுதின நிருபம், வெளிப் படுத்தின விசேஷம், எபிரெயருக்கு எழுதின நிருபம் ஆகிய புஸ்தகங் களைவிட யாக்கோபு எழுதின நிருபம் யூதமார்க்கத்தாருக்கு விசேஷமாக எழுதப்பட்டதாகும்.

3. இயேசு கிறிஸ்துவைப் பற்றி இந்த நிருபத்தில் இரண்டு குறிப்புக்கள் மட்டுமே உள்ளன. (யாக் 1:1; யாக் 2:1)

4. யாக்கோபு எழுதின நிருபத்தை உபதேசத்தின் பிரகாரம் பழைய ஏற்பாட்டில் ஒரு புஸ்தகமாகச் சேர்க்கலாம்.

5. சுவிசேஷம், இயேசு கிறிஸ்து மனுஷ ரூபம் எடுத்தது, அவருடைய ஜீவியம், மரணம், உயிர்த்தெழுதல் ஆகிய எந்த நிகழ்ச்சியும் இந்த நிருபத்தில் காணப்படவில்லை.

6. மேசியா வருவார் என்னும் சத்தியமோ அல்லது அவர் மூலமாக வரும் இரட்சிப்பு பற்றிய சத்தியமோ இந்த நிருபத்தில் காணப்படவில்லை.

7. ஆதித்திருச்சபையில் காணப்பட்ட உபதேச முரண்பாடுகளைப் பற்றிய எந்தக் குறிப்பும் இந்த நிருபத்தில் காணப்படவில்லை.

8. யாக்கோபு தான் எழுதின நிருபத்தில் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களைப் பல இடங்களில் தழுவி எழுதியிருக் கிறார். (யாக் 1:4=மத் 5:48; யாக் 1:5=மத் 7:7; யாக் 1:6= மாற்கு 11:23; யாக் 1:22= மத் 7:24-26; யாக் 1:25= யோவான் 13:17; யாக் 2:5=லூக்கா 6:20; யாக் 2:13=மத் 6:14-15; யாக் 3:12= மத் 7: 16-20; யாக் 4:8-9= லூக்கா 6:24-25; யாக் 4:10=மத் 23:12; யாக் 4:11-12=மத் 7:1; யாக் 5:12= மத் 5:34-37; யாக் 5:1= லூக்கா 6:24; யாக் 5:9= லூக்கா 24:33)

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 5

வசனங்கள் - 108

கேள்விகள் - 24

புதிய தீர்க்கதரிசனம் - 1

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 100

யாக்கோபு - முன்னுரை

பொருளடக்கம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1)

II. கிறிஸ்தவ பரீட்சைகள்

1. பரீட்சையின் நோக்கம் (1:2-4)
2. விசுவாசத்தின் பரீட்சை - ஜெபத்திற்கு பதில்பெறுவதன் இரகசியம் (1:5-8)
3. தாழ்மையின் பரீட்சை (1:9-11)
4. சகிக்கிறதின் பரீட்சை (1:12)
5. சோதிக்கப்படுவதின் பரீட்சை (1:13-16)
6. நன்றி கூறுவதன் பரீட்சை - எல்லா நல்ல ஈவுகளின் ஆதாரம் (1:17)
7. கிறிஸ்தவ அனுபவத்தின் பரீட்சை - புதிய பிறப்பு (1:18)
8. கிறிஸ்தவ ஜீவியத்தின் பரீட்சை (1:19-21)
9. கீழ்ப்படிதலின் பரீட்சை (1:22-25)
10. மாசில்லாத சுத்தமான பக்தியின் பரீட்சை (1:26-27)
11. சகோதர சிநேகத்தின் பரீட்சை (2:1-9)
12. பரிபூரணத்தின் பரீட்சை (2:10-13)
13. விசுவாசத்தின் பரீட்சை (2:14-19)
14. விசுவாசமும் கிரியைகளும் - இரண்டு விளக்கங்கள் (2:20-26)

III. கிறிஸ்தவரும் நாவும்

1. பரிபூரணத்தின் அடையாளம் (3:1-2)
2. நாவின் சுபாவம் (3:3-6)
3. நாவை அடக்க முடியாது (3:7-8)
4. தேவபக்தியற்ற காரியங்களில் நாவை பயன்படுத்துதல் (3:9-12)
5. கிறிஸ்தவர்களால் நாவை அடக்க முடியும் (3:13)
6. மானிட ஞானத்தின் நான்கு அடையாளங்கள் (3:14-16)
7. தெய்வீக ஞானத்தின் ஒன்பது அடையாளங்கள் (3:17-18)

IV. கடிந்துரைகளும் கட்டளைகளும்

1. பிரிவினைக்கு காரணம் (4:1)
2. பின்வாங்கிப்போனவர்களின் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காமல் இருப்பதற்கு ஐந்து காரணங்கள் (4:2-3)
3. உலகத்திற்கு சிநேகிதனாய் இருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான் (4:4-6)
4. ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கு பதினொறு நிபந்தனைகள் (4:7-10)
5. தன்னைத்தான் நியாயாதிபதியாக்கிக் கொள்கிறவன்மீது கடிந்துரை (4:11-12)
6. மனுஷ சித்தமும் ஆண்டவருடைய சித்தமும் (4:13-16)
7. நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமல் போனால் அது அவனுக்கு பாவமாயிருக்கும் (4:17)
8. துன்மார்க்கமான ஐசுவரியவான்கள்மீது கடிந்துரை - ஏழு பாவங்களுக்கு ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு (5:1-6)
9. கர்த்தரின் வருகையைக் குறித்த ஆலோசனை (5:7-9)
10. யோபின் பொறுமை (5:10-11)
11. சத்தியம் பண்ணுதல் (5:12)
12. துன்பப்படுகிறவனும் வியாதிப்பட்டவனும் செய்ய வேண்டிய காரியம் (5:13-14)
13. விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் (5:15-16)
14. ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் (5:17-18)
15. சத்தியத்தை விட்டு விலகி மோசம்போவதும் இரட்சிக்கப்படுவதும் (5:19-20)

1 அதிகாரம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும்

யாக் 1:1 தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல்சொல்லி எழுதுகிறதாவது:

"யாக்கோபு" **(James)** - புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்னும் பெயர் மூவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. செபெதேயுவின் குமாரன். (மத் 4:21) அல்பேயுவின் குமாரன். (லூக்கா 24:10) இந்த நிருபத்தை எழுதிய யாக்கோபு. இவர் இயேசு கிறிஸ்துவின் சகோதரர். (மத் 13:55; மாற்கு 6:3; கலா 1:19). மரியாள் இயேசு கிறிஸ்துவைப் பெற்றெடுத்த பின்பு அவள் மேலும் சில குழந்தைகளையும் பெற்றெடுத்தாள். (லூக்கா 8:19) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழும் வரையிலும் அவருடைய சகோதரர்கள் அவரைத் தேவகுமாரனாக அங்கிகரிக்க வில்லை. (யோவான் 7:5) ஆனால் மற்ற இரு யாக்கோபுக்களும் இயேசுவைத் தேவகு மாரனென்று அங்கிகரித்தார்கள்.

கிறிஸ்துவின் விசேஷித்த தரிசனத்தை இந்த யாக்கோபு பெற்றிருக்கிறார். ஆயினும் அப்போஸ்தலர்களில் ஒருவராக இவர் சேர்க்கப்படவில்லை. (1கொரி 15:7). மற்ற இரண்டு யாக்கோபுக்களும் அப்போஸ்தலர் களாக அங்கிகரிக்கப்பட்டிருந்தார்கள். (மத் 10:2-3).

வேதாகமத்தில் ஒரே பெயரில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் வரும்போது வேதவசனம் எந்தவித குழப்பத்திற்கும் இடமில்லாமல் அவர்களைத் தெளிவாகப் பிரித்துக் கூறும். கன்னி மரியாளுக்கு ஒரு சகோதரி இருந்தாள். அவள் பெயரும் மரியாள். அவளுக்கு இரண்டு குமாரரும், ஒரு குமாரத்தியும் பிறந்தார்கள். (மத் 27:56; மாற்கு 15:40; மாற்கு 16:1; லூக்கா 24:10). கன்னி மரியாளுக்குத் தன் சகோதரி மரியாளைவிட அதிகமான பிள்ளைகள் பிறந்தார்கள். (மத் 13:55; மாற்கு 6:3)

இயேசுவின் சகோதரராகிய யாக்கோபும், மற்ற இரண்டு யாக்கோபுக்களும் வேத வசனங்களில் வேறுபிரித்து கூறப்பட்டிருக்கி றார்கள். (அப் 1:13-14)

யூதா இந்த நூலாசிரியராகிய யாக்கோபுவின் சகோதரன். (யூதா 1:1) வேதவசனங்களில் யோவானின் சகோதரன், செபேதேயுவின் குமாரன், அல்பேயுவின் குமாரன் என்று தெளிவுபடுத்தப்படாமல், "யாக்கோபு" என்று மட்டும் கூறப்பட்டி ருக்குமானால் இந்தப் பெயர் இயேசுவின் சகோதரனாகிய யாக் கோபுவை மட்டுமே குறிக்கும். (அப் 12:2,17; அப் 15:13; அப் 21:18; 1கொரி 15:7; கலா 1:19; கலா 2:9,12; யாக் 1:1; யூதா 1:1). யாக்கோபு கிபி. 62 ஆம் வருஷம் இரத்தச்சாட்சியாக மரித்தார்.

ஊழியக்காரன் **(servant)** - **δοῦλος - doulos** - 1401

பெயரடை - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற **(bondman)** (மத் 20:27)

"தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும்" - பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள் என்பதை விளக்கும் வாக்கியம். (1யோவான் 5:7)

"பன்னிரண்டு கோத்திரங்கள்" - இஸ்ரவேலரின் பன்னிரண்டு கோத்திரங் களில் பத்து கோத்திரங்கள் காணாமல் போய்விட்டதாக ஒருசில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால் யாக்கோபு இந்த நிருபத்தை எழுதிய போது பன்னிரெண்டு கோத்திரங்களும் இருந்தது தெரிய வருகிறது.

"சிதறியிருக்கிற" - யூதர்கள் எல்லாத் தேசங்களுக்கும் சிதறிப்போனார்கள். ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள பல நகரங்களுக்கும் சென்று குடியேறினார்கள். (அப் 2:5-9; அப் 26:6). அவர்கள் எங்கு சென்றாலும் தங்களுடைய யூதமார்க்கத்து முறைமை களைக் கைவிடாமல் கடைப்பிடித்து வந்தார்கள். தாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் ஜெபாலயங்களைக் கட்டினார்கள். மற்ற ஜனங்களோடு எவ்வித கலப்புமில்லாமல் வேறுபிரிந்தே வாழ்ந்தார்கள்.

வாழ்த்துதல் **(greeting)** - **χαίρω** - **chairoo** - 5463

1 அதிகாரம்

வினைச்சொல் - சந்தோஷமடை, சந்தோஷப்படு, களிகூர், மகிழ், வாழ்த்து **(rejoice; joy; hail) An ancient greeting of health and prosperity. greeting** (யாக் 1:1; அப் 15:23; அப் 23:26); **Godspeed** (2யோவான் 10-11); **farewell** (2கொரி 13:11); **joyfully** (லூக்கா 19:6); **joy** (2கொரி 7:13; பிலி 2:17-18; கொலோ 2:5; 1தெச 3:9)

II. கிறிஸ்தவ பரீட்சைகள் - (1:2-2:26 1பேதுரு 1:7; 4:1-9; 1கொரி 4:9-13; 2கொரி 6:3-10;11:23-33; 12:7)

1. பரீட்சையின் நோக்கம் - (ரோமர் 5:3)

யாக் 1:2 என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது,

யாக் 1:3 உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.

யாக் 1:4 நீங்கள் ஒன்றிலும் குறையுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

அகப்படுதல் **(fall into)** - **περιπίπτω** - **peripiptoo** - 4045

வினைச்சொல் - அகப்படு, தட்டவை **(to fall into; to be caught by)** (லூக்கா 10:30; அப் 27:41, யாக் 1:2)

பலவிதமான சோதனைகள் **(divers temptations)** - **πειρασμός** - **peirasmos** - 3986

ஆண்பால் பெயர்ச்சொல் - சோதனை, சோதித்தல் **(trial; attack; put to proof; examine; question)** (கலா 4:14) - சோதனை என்பது எப்போதுமே பாவம்செய்யும் சோதனை என்று பொருள்கூற முடியாது. இந்த வாக்கியம் எந்தவிதமான சோதனை யையும் குறிப்பிடுகிறது. (யாக் 1:2-4,12; 1பேதுரு 1:7).

"உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும்" - ஒரு மனுஷன் சோதிக்கப்படும்போது அவனுடைய விசுவாசம் உறுதிப்படுகிறது. பரீட்சை பொறுமையை உண்டுபண்ணுகிறது. பொறுமை பரிபூரணத்தை அடையச் செய்கிறது. (யாக் 1:3-4,12; ரோமர் 5:3-5; 1பேதுரு 1:7).

யாக்கோபு கூறியிருக்கும் பூரணமான காரியங்கள்

1. பொறுமையின் பரிபூரணக் கிரியை (யாக் 1:4)
2. குறைவில்லாத ஞானம் (பிலி 3:15)
3. பூரண வரங்கள் (யாக் 1:17)
4. பூரணப் பிரமாணம் (யாக் 1:25)
5. கிரியையினால் உண்டாகும் பூரண விசுவாசம். (யாக் 2:22)
6. சொல்தவறாமல் இருக்கும் பூரண புருஷன் (யாக் 3:2)

பூரண பொறுமையின் ஆசீர்வாதங்கள்

1. பூரணர்
2. நிறைவுள்ளவர்

பூரணர் **(Perfect)** - **τέλειος** - **teleios** - 5046

பெயரடை - பூரண, பரிபூரணமான, நிறைவான, தேறின, உத்தமுமான (பிலி 3:15) - தேவனுடைய சித்தத்தைப் பற்றியும், சுவிசேஷத்தைப் பற்றியஅறிவிலும் தனிப்பட்ட முறையில் பூரணமுள்ளவராக இருப்பது.

யாக்கோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

நிறைவுள்ளவர் (Entire) - ὁλόκληρος - holokleeros - 3648

பெயரடை - முழுவதுமான, நிறை வுள்ள (complete in all parts, whole) (1தெச 5:23) - தேவனு டைய வரங்களிலும் எல்லாக் கிருபை களிலும் நிறைவுள்ளவராக இருப்பது.

2. விசுவாசத்தின் பரீட்சை - ஜெபத்திற்கு பதில்பெறுவதன் இரகசியம் - (மத் 17:20; 21:22; மாற்கு 9:23; 11:22-24)

யாக் 1:5 உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந் தால், யாவருக்கும் சம்பூரண மாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனி டத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக் குக் கொடுக்கப்படும்.

யாக் 1:6 ஆனாலும் அவன் எவ்வள வாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத் தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படு கிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பா யிருக்கிறான்.

யாக் 1:7 அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலா மென்று நினையாதிருப்பானாக.

யாக் 1:8 இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயி ருக்கிறான்.

குறைவுள்ளது (lack) - λείπω - leipoo - 3007

வினைச்சொல் - குறைவாகு, குறைவாயிரு, இல்லாமலிரு (come short of) lack (யாக் 1:5; லூக்கா 18:22); wanting (யாக் 1:4; தீத்து 1:5; தீத்து 3:13); destitute (யாக் 2:15).

ஞானம் (wisdom) - σοφία - sophia - 4678

பெண்பால் பெயர்ச்சொல் - ஞானம், சாஸ்திரம் (cleverness; skill; scientific knowledge; wisdom)

விண்ணப்பத்திற்குப் பதில் பெறும்படி ஜெபிக்க வேண்டிய வழிகள்

1. பிதாவிடம் ஜெபிக்க வேண்டும். (யோவான் 16:23)
2. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும். (யோவான் 14:12-15)
3. பரிசுத்த ஆவியினால் ஜெபிக்க வேண்டும். (ரோமர் 8:26)
4. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிலாக்கியங்களையும், உரிமைகளையும் முழுவதுமாகப் புரிந்து ஜெபிக்க வேண்டும். (1கொரி 14:14-15)
5. வேதவசனத்திற்கு ஏற்ற பிரகாரம் ஜெபிக்க வேண்டும். (யோவான் 15:7)
6. சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். (யாக் 1:6)
7. ஜெபத்திற்குக் கிடைக்கும் பதிலுக் காகத் துதித்து ஜெபிக்க வேண்டும். (பிலி 4:6)

சந்தேகப்படுதல் (wavering) - διακρίνω - diakrinoo - 1252

வினைச்சொல் - நிதானி, சந்தேகப்படு, வாக்குவாதம் பண்ணு, வித்தியாசமாய் இரு, செய், வழக்கைத்தீர், தர்க்கித்துப்பேசு, போதகம் பண்ணு, இழுத்துவிடு (doubting; staggering) (1கொரி 11:29)

“சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பா யிருக்கிறான்” - கடலின் அலை ஒரிடத்தில் உயர்வாகவும், மற்றொரிடத்தில் தாழ்வாகவும் இருக்கும். அதுபோலவே சந்தேகப்படுகிறவன் சில சமயம் தேவனை விசுவாசிக்கிறான். வேறொரு சமயத்தில் தேவனை விசுவாசி யாமல் போகிறான். தேவனுடைய வாக்குத் தத்தம் உண்மையானவை என்று ஒரு சமயம் கூறுகிறான். வேறொரு சமயத்தில் தேவனு டைய வாக்குத்தத்தம் நிறைவேறாது என்று கூறி, அதை மறுதலிக்கிறான். தன்னுடைய மனதில் நிலையில்லாமல் இருக்கிறான்.

யாக்கோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

“கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக” - சந்தேகப்படாதவனுடைய ஜெபமே கேட்கப்படும். அவனுக்கே தேவன் பதில் கொடுப்பார். சந்தேகப்படுகிறவன் கர்த்தரிடத்தில் ஒன்றும் பெற்றுக் கொள்ளமாட்டான். (யாக் 1:5,7).

“இருமனமுள்ளவன்” - யூதருடைய வழக்குச் சொல். ஒருவன் ஒரு சமயத்தில் மெய்யான தேவனை ஆராதித்து, வேறொரு சமயத்தில் சிருஷ்டிகரை ஆராதியாமல் சிருஷ்டியை ஆராதிக்கும்போது யூதர்கள் அவனைக் குறிப்பதற்கு இந்தச் சொல்லைப் பயன் படுத்துவார்கள். இம்மையிலும் ஆசை வைத்து, மறுமையிலும் ஆசை வைக்கிறவனை இருமனமுள்ளவன் என்று குறிப்பிடும் வழக்கம் உள்ளது. இப்படிப்பட்டவன் தனக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் வேண்டும். தன்னுடைய மாம்ச இச்சைகளும் நிறைவேற வேண்டுமென்று விரும்புவான்.

3. தாழ்மையின் பரீட்சை - (1பேதுரு 5:5)

யாக் 1:9 தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன்.

யாக் 1:10 ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின்பூவைப்போல்ஒழிந்து போவான்.

யாக் 1:11 சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்; ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப் போவான்.

“தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப் பட்டதைக் குறித்து மேன்மைபாராட்டக் கடவன்” - தாழ்ந்த சகோதரன் பூமியில் ஏழையாக இருந்தாலும், அவனுக்குப் பரலோகத்தைக் குறித்து நம்பிக்கை உள்ளது. ஐசுவரியவான் தாழ்ந்துபோனால் தான் தாழ்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக்கடவன். ஏனெனில் அவனுடைய ஐசுவரியமும், அவனுடைய தாழ்மையும் இந்தப் பூமியில் தற்காலிகமானவையே. நமக்கு நித்தியமான ஐசுவரியம் பரலோ கத்தில் இருக்கிறது. (யாக் 1:9-11).

பூ (flower) - ἄνθος - anthos - 438

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பூ (யாக் 1:10, 1பேதுரு 1:24)

கடும்வெயில் (burning) - καύσων - kausoon - 2742

ஆண்பால் பெயர்ச்சொல் - உஷ்ணம், கடும்வெயில் (மத் 20:12; லூக்கா 12:55, யாக் 1:11)

“ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப்போவான்” - இயேசு கிறிஸ்துவைத் தன் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளாமல் தேவனுடைய காணியாட்சிக்குப் புறம்பாக இருக்கும் ஐசுவரியவான் ஒரு பூவைப்போல வாடிப் போவான். (1தீமோ 6:9-18).

4. சகிக்கிறதின் பரீட்சை - (5:10-11; 1பேதுரு 1:7; 4:12)

யாக் 1:12 சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்.

பாக்கியவான் (Blessed) - μακάριος - makarios - 3107

ஆண்பால் பெயர்ச்சொல் - பாக்கியம் (happy, blessed) (1தீமோ 5:3-11)

“ஜீவகிரீடம்” (the crown of life) - (2தீமோ 4:8)

5. சோதிக்கப்படுவதின் பரீட்சை - (மாற்கு 7:21; 1கொரி 10:9-13; எபி 4:14)

யாக் 1:13 சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.

யாக்கோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

யாக் 1:14 அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.

யாக் 1:15 பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.

யாக் 1:16 என் பிரியமான சகோதரரே, மோசம்போகாதிருங்கள்.

"தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல" - சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப் படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. பொல்லாங்கினால் வரும் சோதனை பிசாசிடமிருந்து வருகிறது.

சோதிக்கப்படுவதில் காணப்படும் நிலைகள்

1. சோதிக்கப்படுதல் - தீமையைப் பற்றிய எண்ணம் (யாக் 1:14)
2. இழுக்கப்படுதல் - எண்ணம் வலுவடைதல் (யாக் 1:14)
3. இச்சை - பாவத்தில் சந்தோஷப்படுதல் (யாக் 1:14)
4. சிக்குண்டுபோதல் - தன்னுடைய சித்தத்தில் பலவீனமாக இருத்தல் (யாக் 1:14)
5. இச்சையானது கர்ப்பந்தரித்தல் - பாவத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுத்தல் (யாக் 1:15)
6. பாவம் - பாவம் செய்தல் (யாக் 1:15)
7. மரணம் - பாவத்தின் சம்பளம். (யாக் 1:15)

இச்சைகளின் வகைகள்

1. மனுஷனுடைய சுய இச்சைகள் (யாக் 1:14; யாக் 4:2; கலா 5:16)
2. சாத்தானின் இச்சைகள் (யோவான் 8:44; எபே 2:2-3; ரோமர் 6:12; 1யோவான் 2:17; 1யோவான் 3:8)
3. தேவனுடைய ஆவல்கள் (கலா 5:17, 22-23; சங் 51:6)

இழுக்கப்படுதல் **(enticed)** - **δελεάζω - deleazoo** - 1185

வினைச்சொல் - இழு, தந்திரமாய் பிடி **entice** (யாக் 1:14); **beguile** (2பேதுரு 2:14); **allure** (2பேதுரு 2:18).

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் மூன்றுவிதமான மரணங்கள்

1. சரீர மரணம் - சரீரத்திலிருந்து உள்ளான மனுஷன் பிரிக்கப்படுவது. (யாக் 2:26)
2. ஆவிக்குரிய மரணம் - பாவத்தின் நிமித்தமாக ஒரு மனுஷன் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவது. (எபே 2:15; ஏசா 59:2; மத் 8:22; கொலோ 2:13; 1தீமோ 5:6)
3. நித்திய மரணம் - மனுஷன் பாவத்தில் ஜீவித்து தேவனிடமிருந்து பிரிந்து வாழவேண்டுமென்று தீர்மானம் பண்ணுவதினால் தேவனிடத்திலிருந்து நித்திய காலமாகப் பிரிக்கப்படுவது. (மத் 10:28; மத் 25:41,46; வெளி 2:11; வெளி 14:9-11; வெளி 20:11-15; வெளி 21:8; வெளி 22:15; ஏசா 66:22-24) இந்த மரணம் இரண்டாம் மரணம் அல்லது தேவனிடமிருந்து இரண்டாம் முறையாகப் பிரிக்கப்படுதல் என்று அழைக்கப்படுகிறது. (வெளி 2:11; வெளி 20:14; வெளி 21:8)

மனுஷன் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். அந்த நோக்கத்திலிருந்து பிரிக்கப்படுவதே மரணம் என்னப்படுகிறது. சரீர மரணத்தில் மனுஷனுடைய சரீரம் மரித்து மண்ணுக்குத் திரும்புகிறது. (ஆதி 3:19; யாக் 2:26) ஆவியும் ஆத்துமாவும் அழியாதவை. சரீரம் மரித்தாலும் ஆவியும், ஆத்துமாவும் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ மரிக்காமல் உயிரோடு இருக்கும். (1பேதுரு 3:4; லூக்கா 12:5; லூக்கா 16:23)

யாக்கோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

"மோசம்போகாதிருங்கள்" - தேவன் ஒரு மனுஷனை பாவம் செய்ய வற்புறுத்துகிறார் என்றோ, அல்லது தேவனே பாவத்தின் காரணர் என்றோ யாராவது கூறினால் அதை நம்பி ஏமாந்து மோசம்போய் விடக்கூடாது. (யாக் 1:13).

6. நன்றி கூறுவதன் பரீட்சை - எல்லா நல்ல ஈவுகளின் ஆதாரம் - (பிலி 1:6; 1தெச 5:18)

யாக் 1:17 நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.

"சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது" - நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி தேவனிடமிருந்து வருகிறது. தீமையான எந்தக் காரியமும், சாத்தானிடமிருந்து வருகிறது. தேவன் வாக்கு மாறாதவர். அவரும் மாறாதவர். ஆனால் சாத்தானோ தன்னுடைய சுய இச்சைக்காக நேரத்திற்கு நேரம் மாறுகிறவன். மனுஷரை எப்படி விழுங்கலாம் என்று கெர்ச்சிக்கிற சிங்கம்போல சுற்றித் திரிகிறவன்.

மாறுதல் (change) - παραλλαγή - parallagee - 3883

பெண்பால் பெயர்ச்சொல் - மாறுதல் (change; variation, variableness) - இது வானவியல் சம்பந்தமான வார்த்தையாகும். வானத்திலுள்ள கிரகங்கள் இடம் மாறுவதினால் ஒவ்வொரு வருஷமும் சீதோஷ்ண நிலைகளில் மாற்றம் உண்டாகிறது. தேவன் இதுபோல மாறுகிறவர் அல்ல. எல்லாக் காலத்திலும் அவர் ஒன்றுபோல் இருக்கிறவர். அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. (எபி 13:8).

7. கிறிஸ்தவ அனுபவத்தின் பரீட்சை - புதிய பிறப்பு - (யோவான் 3:5; 1பேதுரு 1:23; 1யோவான் 5:1)

யாக் 1:18 அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்தியவசனத்தினாலே ஜெநிப்பித்தார்.

"அவர் சித்தங்கொண்டு" - எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதும் தேவனுடைய வார்த்தையினால் மறுபடியும்ஜெநிப்பிக்கப்படவேண்டும் என்பதும் தேவனுடைய சித்தமாகும். (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

"நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" - மனுஷரைப் புது சிருஷ்டியாக்கும் பிரதிநிதிகளில் தேவனுடைய சத்திய வசனமும் முக்கிய பங்கு வகிக்கிறது. (யோவான் 3:5; 1பேதுரு 1:23; எபே 5:26).

"முதற்பலன்கள்" (firstfruits) - (ரோமர் 8:23)

8. கிறிஸ்தவ ஜீவியத்தின் பரீட்சை - (எபே 4:1)

யாக் 1:19 ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்.

யாக் 1:20 மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே.

யாக் 1:21 ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.

யாக்கோபு விசுவாசிகளுக்குக் கூறியிருக்கும் கட்டளைகள்

1. கேட்கிறதற்குத் தீவிரமாயிருக்க வேண்டும். (யாக் 1:19)

1 அதிகாரம்

2. பேசுகிறதற்குப் பொறுமையாயிருக்க வேண்டும். (யாக் 1:19)

3. கோபிக்கிறதற்குத் தாமதமாயிருக்க வேண்டும். (யாக் 1:19)

4. எல்லாவித அழுக்கையும் ஒழித்துவிட வேண்டும். (யாக் 1:21)

5. எல்லாவிதமான கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிடவேண்டும். (யாக் 1:21)

6. வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும். (யாக் 1:22)

7. திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும்.

பல்வேறுவிதமான மனநிலைகள்

1. எளிதில் கோபப்பட்டு எளிதில் சாந்தமடைகிறவர்கள்.

2. எளிதில் கோபப்படுகிறவர்கள். இவர்களைச் சாந்தப்படுத்துவது கடினம்.

3. எளிதில் கோபப்படாதவர்கள். இவர்களைச் சாந்தப்படுத்துவது எளிது.

4. எளிதில் கோபப்படாதவர்களும், எளிதில் சாந்தமடையாதவர்களும்.

"மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" - மனுஷன் கேட்பதற்குத் தீவிரமாய் இருக்க வேண்டும். பேசுவதற்கும் கோபிக்கிறதற்கும், பொறுமையாயும், தாமதமாயும் இருக்க வேண்டும். மனுஷனுடைய கோபம் தேவன் எதிர்பார்க்கும் நீதியை நடப்பிக்காது. இஸ்ரவேல் ஜனங்கள் பக்தி வைராக்கியம் கொண்டு, தீர்க்கதரிசிகளையும், அவர்களுடைய சொந்த மேசியாவையும், மேசியாவைப் பின்பற்றுகிறவர்களையும் கோபத்தோடு கொலைசெய்தார்கள். ஆனால் அவர்களுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கவில்லை.

அழுக்கு (filthiness) - **ῥυπαρία** - **rhyparia** - 4507

பெண்பால் பெயர்ச்சொல் - அழுக்கு **(moral filthiness; impure and unholy affections; baseness; vileness; depravity)**

அழுக்கு (dirty) - **ῥυπαρός** - **rhyparos** - 4508

பெயரடை - கந்தையான **(cheap, shabby; foul; dirty; moral wickedness; sordid; mean) vile** (யாக் 2:2)

அழுக்கு (filth) - **ῥύπος** - **rhypos** - 4509

ஆண்பால் பெயர்ச்சொல் - அழுக்கு **(filth)** (1பேதுரு 3:21)

அசுத்தம் (filth) - **ῥυπαίνω** - **rhypainoo** - 4510

வினைச்சொல் - அசுத்தமாயிரு **(moral filth)** (வெளி 22:11).

கொடிய (superfluity) - **περισσεία** - **perisseia** - 4050

பெண்பால் பெயர்ச்சொல் - பரிபூரணம், அதிகம் **superfluity** (யாக் 1:21) **abundance** (ரோமர் 5:17; 2கொரி 8:2; 2கொரி 10:15)

துர்க்குணம் (wickedness) - **κακία** - **kakia** - 2549

பெண்பால் பெயர்ச்சொல் - துர்க்குணம், குரோதம், பொறாமை (எபே 4:31)

சாந்தம் (meekness) - **πραΰτης** - **prautees** - 4240

பெண்பால் பெயர்ச்சொல் - சாந்தம் **(mildness; gentleness)** (யாக் 1: 21, 3:13; 1பேதுரு 3:15)

1 அதிகாரம்

நாட்டப்படுதல் (engrafted) - εμφυτος - emphytos - 1721

பெயரடை - நாட்டப்பட்ட (inborn; innate) - தேவனுடைய சத்திய வசனம் ஒருவருடைய ஆத்துமாவில் நாட்டப்படுவதினால் அந்த ஆத்துமா இரட்சிக்கப்பட்டு, மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறது. (யாக் 1:18; எபே 5:26) ஆகையினால் தேவ வசனம் விதையாக

வர்ணிக்கப்படுகிறது. (1பேதுரு 1:23; 1யோவான் 3:9) தேவவசனம் ஆத்துமாவில் நாட்டப்படும்போது அது முளைத்து, நித்திய ஜீவனாக வளர்கிறது. நன்றாகப் பண்படுத்தப் பட்ட நல்ல நிலத்தில் நாட்டப்படும் விதை மட்டுமே நன்றாக முளைத்துப் பலன் தரும். (மத் 13:3-30).

9. கீழ்ப்படிதலின் பரீட்சை - (எபி 11:8-10, 17-19; ரோமர் 1:5)

யாக் 1:22 அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர் களாயும் இருங்கள்.

யாக் 1:23 என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப் பான்.

யாக் 1:24 அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போன வுடனே, தன்சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான்.

யாக் 1:25 சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கி றதை மறக்கிறவனாயிராமல், அதற் கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானா யிருப்பான்.

செய்கிறவர் (doers) - ποιητής - poieetees - 4163

ஆண்பால் பெயர்ச்சொல் - புலவர், செய்கிறவர் (a performer) doer (யாக் 1:22,23,25; யாக் 4:11; ரோமர் 2:13) poet (அப் 17:28).

கேட்கிறவர் (hearers) - ἀκροατής - akroatees - 202

ஆண்பால் பெயர்ச்சொல் - கேட்கிறவர்கள் (யாக் 1:22,23,25; ரோமர் 2:13)

வஞ்சித்தல் (deceiving) - παραλο γίζομαι - paralogizomai - 3884

வினைச்சொல் - வஞ்சி (to deceive by false reasoning) (கொலோ 2:4, யாக் 1:22)

"கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்" - நாம் திருவசனத்தைக் கேட்டு, அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்கிறவன் அதிலுள்ள அசுத்தங்களைப் பார்க்கும்போது வருத்தப்படுவான். அவனுடைய வருத்தம் அவன் கண்ணாடிக்கு முன்நின்று, பார்க்கும் வரையில்தான் இருக்கும். அவன் கண்ணாடியை விட்டுத் தூரத்தில் போய் விட்டால், அவனுடைய முகத்தின் அசுத்தம் அவனுக்கு நினைவில் இருப்பதில்லை. விசுவாசிகளும் இப்படித்தான் இருக்கி றார்கள். தேவவசனங்களை வாசிக்கும் போது அதன் சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வேண்டு மென்று விரும்புகிறார்கள். வேத வசனத்தை வாசிப்பதை விட்டுவிட்டால், அவர்களுக்குள் சத்தியம் நினைவில் இருப்பதில்லை. தன்சாயல் இன்னதென்பதை மறந்துவிடு கிறார்கள். (யாக் 1:24).

கண்ணாடி (glass) - ἔσοπτρον - esoptron - 2072

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல்- கண்ணாடி (mirror) (1கொரி 13:12, யாக் 1:23)

1 அதிகாரம்

உற்றுப்பார்த்தல் (looketh into) - **παρακύπτω** - **parakyptoo** - 3879

வினைச்சொல் - பார், உற்றுப்பார் (**to bend over for a better look**) **look into** (யாக் 1:25) **stoop down** (லூக்கா 24:12; யோவான் 20:5,11).

"சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணம்" (**the perfect law of liberty**) - இது மோசேயின் பிரமாணமல்ல. பூரணப் பிரமாணமாகிய புதிய பிரமாணத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (எபி 8:6). மோசேயின் பிரமாணம் குறைவுடையது. தவறானது. (சங் 19:7, எபி 7:12,18-19,22; எபி 8:6-7).

நிலைத்திருத்தல் (continueth) - **παραμένω** - **paramenoo** - 3887

வினைச்சொல் - தங்கு, நிலைத்திரு (**to stay beside; stand by; stand fast**) **continue** (யாக் 1:25; எபி 7:23; பிலி 1:25) **abide** (1கொரி 16:6) - சத்திய வசனத்தை வாசித்து, தனக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி ஒவ்வொருவரும் தங்களுடைய பரிசுத்த ஜீவியத்தில் முன்னேறிச் செல்ல வேண்டும். இப்பேர்ப்பட்டவர்கள் மட்டுமே தங்கள் செய்கைகளில் பாக்கியவான்களாக இருப்பார்கள்.

10. மாசில்லாத சுத்தமான பக்தியின் பரீட்சை - (ரோமர் 8:1-13; 2கொரி 5:17; கொலோ 3:5-10)

யாக் 1:26 உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.

யாக் 1:27 திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

தேவபக்தி (religious) - **θρῆσκος** - **threeskos** - 2357

பெயரடை - தேவபக்தி (**a careful follower of his belief**)

அடக்குதல் (bridleth) - **χαλιναγωγέω** - **chalinagoogeoo** - 5468

வினைச்சொல் - அடக்கு (யாக் 1:26, 3:2)

வஞ்சித்தல் (deceiveth) - **ἀπατάω** - **apataoo** - 538

வினைச்சொல் - மோசம் போக்கு, வஞ்சி (**to cheat; outwit; to be deceived**) (எபே 5:6; 1தீமோ 2:14, யாக் 1:26)

தேவபக்தி (religion) - **θρησκεία** - **threeskeia** - 2356

பெண்பால் பெயர்ச்சொல் - சமயம், ஆராதனை, தேவபக்தி, பக்தி **religion** (யாக் 1:26-27; அப் 26:5) **worshiping** (கொலோ 2:18).

வீண் (vain) - **μάταιος** - **mataios** - 3152

பெயரடை - வீணான **vain** (யாக் 1:26; 1கொரி 3:20; 1கொரி 15:17; தீத்து 3:9) **vanity** (அப் 14:15).

மாசில்லாத சுத்தமான பக்தியின் அம்சங்கள்

1. திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறது (யாக் 1:27)

2. உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறது (மத் 5:16,44; 2கொரி 9:8;கொலோ 1:10; 1தீமோ 1:5; தீத்து 2:7,14; தீத்து 3:1,8; எபி 12:14; யாக் 1:27; யாக் 3:13,17; 1பேதுரு 2:12; 1யோவான் 3:17)

2 அதிகாரம்

11. சகோதர சிநேகத்தின் பரீட்சை - (யோவான் 13:34-35; 1கொரி 13; 1யோவான் 3:11-17)

யாக் 2:1 என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக.

யாக் 2:2 ஏனெனில், பொன்மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது,

யாக் 2:3 மினுக்குள்ள வஸ்திரந் தரித்தவனைக் கண்ணோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும்; தரித்திரனைப் பார்த்து: நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடி யண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால்,

யாக் 2:4 உங்களுக்குள்ளே பேதகம் பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா?

யாக் 2:5 என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா?

யாக் 2:6 நீங்களோ தரித்திரரைக் கனவீனம் பண்ணுகிறீர்கள். ஐசுவரியவான்களல்லவோ உங்களை ஒடுக்குகிறார்கள்? அவர்களல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள்?

யாக் 2:7 உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்?

யாக் 2:8 உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேத வாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்.

யாக் 2:9 பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்களென்று நியாயப் பிரமாணத் தால் தீர்க்கப்படுவீர்கள்.

"இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருப்பீர்களாக"- கிறிஸ்துவின்மேல் பரிபூரண விசுவாசம் வைக்க வேண்டும். தவறான ஆதாயத்தின்மேல் பிரியப்பட்டு, இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்கக் கூடாது. ஐசுவரியவானாக வேண்டுமென்று ஆசைப்பட்டு, தேவனிடத்தில் ஐசுவரியம் வேண்டுமென்று கேட்கக்கூடாது. சமுதாயத் தேவைகளையும், ஆவிக்குரிய தேவைகளையும் சந்திப்பதற்குத் தேவையான பொருளாதார ஆதாரம் வேண்டுமென்றே தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும். (யாக் 2:1-4).

ஆலயம் **(assembly)** - **συναγωγή** - **synagoogee** - 4864

பெண்பால் பெயர்ச்சொல் - ஜெபஆலயம், ஆலயம், கூட்டம் **assembly** (யாக் 2:2); **congregation** (அப் 13:43); **synagogue** (மாற்கு 1:21).

பொன் மோதிரம் **(gold ring)** - **χρυσοδ ακτύλιος** - **chrysodaktylios** - 5554

பெயரடை - பொன் மோதிரமான - பொன் மோதிரம் பாவமல்ல. புருஷரும், ஸ்திரீகளும் பொன்மோதிரங்களை அணியும் வழக்கம் பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே இருக்கிறது. ஆனாலும் பொன்மோதிரத்தைக் கனப்படுத்தக் கூடாது.

மினுக்கானது **(shining)** - **λαμπρός** - **lampros** - 2986

யாக்கோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

பெயரடை - மினுக்கான, பிரகாசமான, தெளிவான (bright; brilliant; radiant; shining) goodly (யாக் 2:2; வெளி 18:14); bright (அப் 10:30; வெளி 22:16); white (வெளி 15:6; வெளி 19:8); clear (வெளி 22:1); gay (யாக் 2:3); gorgeous (லூக்கா 23:11) - மோதிரத்தைப் போலவே மினுக்குள்ள வஸ்திரமும் பாவமல்ல. ஆயினும் மோதிரமும், மினுக்குள்ள வஸ்திரமும் அணிந்திருப் போருக்கு ஆலயத்தில் விசேஷித்த அந்தஸ்தும், மரியாதையும் கொடுத்து ஒன்றுமில்லாத ஏழைகளை அவம திப்பது சரியானதல்ல.

வஸ்திரம் (apparel) - ἐσθής - esthees - 2066

பெண்பால் பெயர்ச்சொல் - வஸ்திரம் apparel (யாக் 2:2; அப் 1:10; அப் 12:21); raiment (யாக் 2:2); clothing (யாக் 2:3; அப் 10:30); robe (லூக்கா 23:11).

"கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது" - ஜெபாலயங்களில் சிறு வழக்குகளை விசாரிப்பதற்கு நீதிமன்றங்கள் செயல்படுவது வழக்கம். (மாற்கு 1:21) இந்த வசனத்தில் இங்குக் கூறப்பட்டிருப்பது ஜெபாலயத்தில் ஆராதனை நடைபெறும் காரியமல்ல. நீதிமன்றத்திற்காக ஜனங்கள் கூடிவருவதை இந்த வசனம் குறிப்பிடுகிறது. நீதிமன்றத்தில் ஐசுவரியவானுக்கு ஒரு நீதியும், தரித்திரனுக்கு வேறொரு நீதியும் என்று பட்சபாதம் காட்டுவதே தவறு. நீதிக்கு முன்பாக ஐசுவரியவானையும், தரித்திரனையும் ஒன்றுபோல் நடத்த வேண்டும்.

தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களுடைய சுபாவங்களும், கிரியைகளும்

1. பட்சபாதத்தோடு செயல்படும் நீதிபதி (யாக் 2:4)
2. தகாத சிந்தனைகளோடு நிதானிக்கும் நீதிபதி. (யாக் 2:4)
3. தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொண்டிருக்கிறார். (யாக் 2:5)
4. நீதிபதி தரித்திரரைக் கனவீனம் பண்ணுகிறார். (யாக் 2:6)
5. துன்மார்க்கர் தரித்திரரை ஒடுக்குகிறார்கள். (யாக் 2:6)
6. தங்களுக்குச் சாதகமாக நீதி வழங்குமாறு ஐசுவரியவான்கள் நீதிபதிகளை வற்புறுத்துகிறார்கள்.
7. அவர்கள் தேவனுடைய நாமத்தைத் தூஷிக்கிறார்கள். (யாக் 2:7)

"ராஜரிக பிரமாணம்" - பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையும், புதிய ஏற்பாட்டு உடன்படிக்கையும் "நாம் நம்மிடத்தில் அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும்" என்று வலியுறுத்துகிறது. (லேவி 19:18; மத் 22:39; ரோமர் 13:8-9; கலா 5:14; எபே 5:2) யாக்கோபு இந்த நிருபத்தை விசுவாசிகளுக்கு எழுதுகிறார். கிரேக்கர் மத்தியில் ஒரு காரியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது அதை "ராஜரிகமானது" என்று கூறுவது வழக்கம். இதே பயன்பாடே இங்கு பிரமாணத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (யாக் 1:25)

"மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்" - பட்சபாதமுள்ளவர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறார்கள். (1யோவான் 3:4).

12. பரிபூரணத்தின் பரீட்சை - (மத் 5:44-48; 2கொரி 10:4-6)

யாக் 2:10 எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்.

யாக் 2:11 ஏனென்றால், விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால், நீவிபசாரஞ் செய்யாமலிருந்தும்கொலை செய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்.

யாக்கோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

யாக் 2:12 சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்.

யாக் 2:13 ஏனென்றால், இரக்கஞ் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத் தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்.

"எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" - ஒரு ஆத்துமாவை அழிப்பதற்கு ஒரு பாவமே போதுமானது. (ஆதி 2:17; ரோமர் 5:12-21). நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளுகிறவர்கள் அதை முழுவதுமாகக் கைக்கொள்ள வேண்டும். (உபா 27:26; கலா 3:10) நியாயப்பிரமாணத்தில் ஒரு பிரமாணத்தை மீறினாலும் மீறுகிறவர்க ளுக்கு மரணம் தண்டனையாகக் கொடுக்கப் படும். (யாக் 2:11; ரோமர் 1:32; 1கொரி 6:9-11; கலா 5:19-21). ஆகையினால் ஒருவன் நியாயப் பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் அவன் எல்லாவற்றிலும் குற்றவாளியா யிருப்பான்.

"விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்" - இந்தக் கட்டளை புதிய கற்பனையிலும், பழைய கற்பனையிலும் உள்ளது. (யாத் 20:13-14; மத் 5:21-32; ரோமர் 13:9). இது பழைய கற்பனையில் உள்ளதினால் நாம் இதற்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை. ஆனால் இந்தக் கட்டளை புதிய கற்பனையிலும் உள்ளது. ஆகையினால் இதற்குக் கீழ்ப்படிய வேண்டும். அப் 15:24).

"சுயாதீனப்பிரமாணம்" (the law of liberty) - இந்த வாக்கியம் புதிய கற்பனையைக் குறிக்கும். (யாக் 1:25) இந்தச் சுவிசேஷத்தினால் இக்காலத்து மனுஷர் நியாயந்தீர்க்கப்படுவார்கள். (ரோமர் 2:16).

பிரமாணங்களின் வகைகள்

1. இரக்கத்தின் பிரமாணம் (The law of mercy) (மத் 5:7)
2. மன்னிப்பின் பிரமாணம் (Law of forgiveness) (மத் 6:14-15)
3. விதைப்பு, அறுப்பு ஆகியவற்றின் பிரமாணம் (Law of sowing and reaping) (கலா 6:7-8)

"இரக்கம்" - இரக்கம் பெறுகிறவனும், இரக்கம் செய்கிறவனும் மகிழ்ந்து களிகூரலாம். அவர்கள் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதினால் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். நியாயத்தீர்ப்பிற்கு மேலாக இரக்கத்தினால் அவர்கள் உயர்த்தப்படுவார்கள். நியாயப் பிரமாணத்தில் இரக்கம் இல்லை. கிருபையின் மூலமாக வரும் இரக்கம் நியாயப் பிரமாணத்தை விட மேலானது. நியாயப்பிரமாணத்தின் நியாயத் தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டு மென்றால், நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற்று, மனுஷருக்கு இரக்கம் செய்ய வேண்டும். நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும். (யோவான் 3:36; யோவான் 5:24).

13. விசுவாசத்தின் பரீட்சை - (5:10-11; 1பேதுரு 1:7; எபி 11:17-19)

யாக் 2:14 என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவ னானால் அவனுக்குப் பிரயோஜன மென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?

யாக் 2:15 ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது,

யாக் 2:16 உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டிய வைகளை அவர்களுக்குக் கொடா விட்டால் பிரயோஜனமென்ன?

யாக் 2:17 அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்.

2 அதிகாரம்

யாக் 2:18 ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே.

யாக் 2:19 தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லது தான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன.

"ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவன்" - கிறிஸ்தவ ஜீவியத்திற்கு விசுவாசம் மட்டுமே போதுமானது. கிரியை தேவையற்றது என்று ஒருசிலர் கூறுகிறார்கள். கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது. (யாக் 2:17-18, 20-26) நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுகிறோம். அதே சமயத்தில் தேவன் மீது நாம் வைத்திருக்கும் விசுவாசத்தை மனுஷர் முன்பாக வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். எல்லா மனுஷருக்கும் முன்பாக நன்மையான காரியங்களையே செய்ய வேண்டும். (மத் 5:16; மத் 16:27; எபே 2:10; 1தீமோ 6:18; 2தீமோ 3:17; தீத்து 1:16; தீத்து 2:7,14; தீத்து 3:8). யாரும் கிரியையினால் நீதிமானாக்கப்படுவதில்லை. (ரோமர் 3:25-31; ரோமர் 4:1-6; ரோமர் 9:11; ரோமர் 11:6; கலா 2:16; எபே 2:8-9; தீத்து 3:5) ஆனாலும் நீதிமானாக்கப்பட்டவர்கள் தங்கள் தேவனுக்குரியவர்கள் என்பதைத் தங்களுடைய கிரியைகளின் மூலமாக நிரூபிக்க வேண்டும். (யாக் 2:14-18, 20-26).

"விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" - கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது. அதுபோலவே விசுவாசமில்லாத கிரியையும் செத்ததுதான்.(யாக் 2:17,20,26). கிரியையும், விசுவாசமும் இணைந்து செயல்பட வேண்டும். ஒன்றில்லாமல் மற்றொன்றினால் பிரயோஜனமில்லை.

"பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" - தேவன்மீது விசுவாசம் வைப்பதினால் ஒருவர் நீதிமானாக்கப்பட்டிருக்கிறார் என்று நிரூபிக்க முடியாது. ஏனெனில் பிசாசுகளும் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசித்து நடுங்குகின்றன. பிசாசுகள் தங்களுடைய விசுவாசித்தினால் நீதிமான்களாக்கப்படவில்லை.

14. விசுவாசமும் கிரியைகளும் - இரண்டு விளக்கங்கள் - (ஆதி 22; யோசுவா 2)

யாக் 2:20 வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ?

யாக் 2:21 நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ, நீதிமானாக்கப்பட்டான்?

யாக் 2:22 விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.

யாக் 2:23 அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்; அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்.

யாக் 2:24 ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப் படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.

யாக் 2:25 அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்?

யாக் 2:26 அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

கிரியைகளினால் மட்டும் என்றல்லாமல் கிரியைகளினாலும் விசுவாசத்தினாலும் நீதிமானாக்கப்பட்டவர்களுக்கு எடுத்துக் காட்டுக்கள் (யாக் 2:21-26)

1. ஆபிரகாம் (Abraham) (யாக் 2:21-24; ஆதி 22)

2. ராகாப் (Rahab) (யாக் 2:25; யோசு 2, யோசு 6)

யாக்கோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

"ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது" - ஆதியாகமம் 22 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் ஆபிரகாம் தேவனிடத்தில் தான் வைத்திருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தினான். தன்னுடைய குமாரன் ஈசாக்கை பலியிடுமாறு தேவன் ஆபிரகாமிடத்தில் கூறினார். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அந்த விசுவாசத்தினால் அவன் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மீது செலுத்தினான். (யாக் 2:23). இந்தக் காரியத்தினால் ஆபிரகாம் நீதிமானாக்கப் படவில்லை. இந்த நிகழ்ச்சிக்கு 40 அல்லது 50 வருஷத்திற்கு முன்பாகவே ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான். (ஆதி 12:1-4; ஆதி 15:6; ரோமர் 4:1-6).

"ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்; அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" - ஆதி 15:6 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் 22 ஆவது அதிகாரத்தில் ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மீது செலுத்துவதற்குப் பல வருஷங்களுக்கு முன்பாக ஆதி 15:6 ஆம் வசனம் நிறைவேறிற்று. கீழ்ப்படிதலோடு செய்யும் ஒவ்வொரு கிரியையும் விசுவாசத்தின் செயலாகும்.

"தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்" - ஒரு மனுஷனுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம் அவன் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப் படுவதாகும்.

'மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திர மல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப் படுகிறான்" - யாக்கோபு இந்த நிருபத்தில் மனுஷன் எவ்வாறு நீதிமானாக்கப்படுகிறான் என்பதை விளக்கிக் கூறுகிறார். மனுஷருக்கு விசுவாசமும் வேண்டும், கிரியையும் வேண்டும். பவுலும் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். விசுவாசிகள் தங்களுடைய விசுவாசத்தைக் கிரியைகளினால் வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். (யாக் 2:14).

"ராகாப் என்னும் வேசி" - இவள் தன் கிரியைகளினாலும், விசுவாசத்தினாலும் நீதியுள்ளவளாக்கப்பட்டாள். (யோசு 2; எபி 11:31).

"ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது" - மனுஷருடைய மரணத்தின் போது சரீரம் மட்டுமே மரிக்கிறது. சரீரத்தை விட்டு ஆவியும், ஆத்துமாவும் வெளியேறிச் செல்வதினால் சரீரத்திற்கு மரணம் உண்டாகிறது. சரீரம் மண்ணுக்குத் திரும்புகிறது. மரித்த பின்பு நீதிமானுடைய ஆவியும், ஆத்துமாவும் பரலோகத்திற்குச் சென்று தங்களுடைய உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11). மரித்த துன்மார்க்கருடைய ஆவியும், ஆத்துமாவும் நரகத்திற்குச் சென்று தங்களுடைய உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். (லூக்கா 16:19-31; ஏசா 14:9; வெளி 20:11-15). ஆவியும், ஆத்துமாவும் ஆவிக்குரியவை. அவை ஒருபோதும் மரிப்பதில்லை. அவை மண்ணுக்குத் திரும்பாது.

"கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" - உள்ளான மனுஷன் சரீரத்தைவிட்டு வெளியேறியவுடன் சரீர மரணம் உண்டாகிறது. அதுபோல கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. செத்த விசுவாசத்தினால் பயன் ஒன்றுமில்லை.

3 அதிகாரம்

III. கிறிஸ்தவரும் நாவும் - (1:26; 3:1-12; நீதி 12:18; 13:3; 15:4; 18:8,21; லூக்கா 6:45; 1பேதுரு 3:10; ரோமர் 3:13)

1. பரிபூரணத்தின் அடையாளம்

யாக் 3:1 என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதக ராகாதிருப்பீர்களாக.

யாக் 3:2 நாம் எல்லோரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனு மாயிருக்கிறான்.

போதகர் (master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teachers) (லூக்கா 12:48, அப் 13:1).

"அநேக விஷயங்களில் தவறுகிறோம்" - நாம் எல்லோரும் பல காரியங்களில் இடறல் அடைகிறோம்.

2. நாவின் சுபாவம்

யாக் 3:3 பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவை களின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.

யாக் 3:4 கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளா யிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராகமிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.

யாக் 3:5 அப்படியே நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையான வைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது!

யாக் 3:6 நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப் படுகிறதாயும் இருக்கிறது!

பெரிய காரியங்களைச் செய்யும் சிறிய பொருட்கள்

1. குதிரைகளை வழிநடத்தும் கடிவாளம். (யாக் 3:3)
2. கப்பல்களை வழிநடத்தும் சுக்கான் (யாக் 3:4)
3. பெரிய காட்டைக் கொளுத்தும் சிறிய நெருப்பு
4. முழு சரீரத்தையும் கறைப்படுத்தும் நாவு (யாக் 3:5-8)

"ஆயுள் சக்கரம்" (course of nature) - மனுஷருடைய ஆயுள். மனுஷனுடைய நாவு பரிசுத்தப்பட வேண்டும். துன்மார்க்கனுடைய நாவு பலருடைய ஆயுள் சக்கரமாகிய ஜீவியத்தையே அழித்துப்போடும்.

சக்கரம் (wheel) - τροχός - trochos - 5164

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சக்கரம்

"நரக அக்கினியினால் கொளுத்தப் படுகிறது" - துன்மார்க்கருடைய ஆயுள் சக்கரம் நரகத்திற்குச் சென்று, அங்கு நரக அக்கினியினால் கொளுத்தப்படும்.

நரகம் (hell) - γέεννα - geenna - 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம் (லூக்கா 12:5)

3 அதிகாரம்

3. நாவை அடக்க முடியாது

யாக் 3:7 சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப் பட்டதுமுண்டு.

யாக் 3:8 நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது மாயிருக்கிறது.

"நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது" - மனுஷர் எல்லா விலங்குகளையும் அடக்கிப் பழக்குகிறார்கள். ஆனால் மனுஷனால் தன் நாவை அடக்க முடிய வில்லை. மனுஷனுடைய இரட்சிப்பு மட்டுமே அவனுடைய நாவின் பேச்சு வழக்குகளைக் கட்டுப்படுத்தும். (2கொரி 5:17-18).

நாவைப் பற்றிய காரியங்கள்

1. சிறிய அவயவம் (யாக் 3:5)
2. பெருமைகளைப் பேசும் (யாக் 3:5)
3. நெருப்பைப் போன்றது (யாக் 3:6)
4. அநீதி நிறைந்த உலகம் (யாக் 3:6)
5. முழுச்சரீரத்தையும் கறைப்படுத்துகிறது. (யாக் 3:6)
6. ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறது. (யாக் 3:6)
7. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. (யாக் 3:7-8)
8. நாவு அடங்காத பொல்லாங்குள்ளது. (யாக் 3:8)
9. சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது (யாக் 3:8)
10. தேவனைத் துதிக்கிறது, மனுஷனைச் சபிக்கிறது. (யாக் 3:9)
11. ஞானத்திற்குரிய சாந்தத்தோடே பேசும் ஆற்றல் உள்ளது. (யாக் 3:13)
12. கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் உண்டுபண்ணக் கூடியது. (யாக் 3:14)

நாவுகளின் வகைகள்

1. வீரியன் பாம்பின் நாக்கு **(Viper's tongues)** (யோபு 20:16)
2. இச்சகம் பேசும் நாக்கு **(Flattering tongue)** (சங் 5:9)
3. பெருமைகளைப் பேசுகிற நாவு **(Proud tongue)** (சங் 12:3)
4. கள்ள நாவு **(Lying tongue)** (சங் 109:2; நீதி 6:17)
5. கபடநாவு **(Deceitful tongue)** (சங் 120:2)
6. கபடநாவு **(False tongue)** (சங் 120:3)
7. மாறுபாடுள்ள நாவு **(Froward tongue)** (நீதி 10:31)
8. மாறுபாடுள்ள நாவு **(Wholesome tongue)** (நீதி 10:31)
9. ஒளஷதம் போன்ற நாவு. **(Healthy tongue)** (நீதி 12:18)
10. கேடுள்ள நாவு **(Naughty tongue)** (நீதி 17:4)
11. புரட்டு நாவு **(Perverse tongue)** (நீதி 17:20)
12. இனிய நாவு **(Soft tongue)** (நீதி 25:15)
13. பரியாச உதடு **(Stammering tongue)** (ஏசா 28:11; ஏசா 33:19)
14. புறங்கூறுகிற நாவு **(Backbiting tongue)** (நீதி 25:23)

யாக்கோபு - தொகுப்புரை

3 அதிகாரம்

15. சாவுக்கேதுவான விஷம் நிறைந்த நாவு (Poison tongue) (யாக் 3:8)

4. தேவபக்தியற்ற காரியங்களில் நாவை பயன்படுத்துதல்

யாக் 3:9 அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.

யாக் 3:10 துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.

யாக் 3:11 ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?

யாக் 3:12 என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்க மாட்டாது.

சாயல் (similitude) - ὁμοίωσις - homoioosis - 3669

பெண்பால் பெயர்ச்சொல் - சாயல் (making like; image) - (ஆதி 1:26; எபே 1:10; தானி 10:16)

யாக் 3:11-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஒப்புமைகள்

1. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்காது.
2. அத்திமரம் ஒலிவப்பழங்களைக் கொடுக்காது.
3. திராட்சச்செடி அத்திப்பழங்களைக் கொடுக்காது.
4. உவர்ப்பான நீரூற்று தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது.

5. கிறிஸ்தவர்களால் நாவை அடக்க முடியும் - (கலா 5:22-23; 1பேதுரு 3:10)

யாக் 3:13 உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்.

"ஞானி" (wise man) - தன் நாவை அடக்கி, மற்றவர்களுக்கு நலமான காரியங்களை உபதேசம் பண்ணுகிறவன்.

நடக்கை (conversation) - ἀναστροφή - anastrophee - 391

பெண்பால் பெயர்ச்சொல் - நடக்கை, நடத்தை, நடந்துகொள்ளுதல் (conduct; behavior)

"ஞானத்திற்குரிய சாந்தம்" - உண்மையான ஞானம் சாந்தமுள்ளது. பெருமைப்படுகிறவன் ஞானியல்ல. பெருமைப்படுகிற ஞானியிடம் கல்வி இருக்கும். ஆனால் அவனிடம் மெய்யான ஞானம் இருக்காது.

6. மானிட ஞானத்தின் நான்கு அடையாளங்கள்

யாக் 3:14 உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள்.

யாக் 3:15 இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.

யாக் 3:16 வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு.

3 அதிகாரம்

"உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால்" - கசப்பான வைராக்கியமும், விரோதமும் ஒருவனுடைய உள்ளத்தில் இருக்குமானால் அவனிடம் மெய்யான ஞானம் இராது. இப்பேர்ப்பட்டவர்கள் சத்தியத்தைப் பேசினாலும் சத்தியம் அவர்களுக்குள் இராது.

பொய்யான ஞானத்தின் தன்மைகள்

1. இருதயத்திலே கசப்பான வைராக்கியம் (யாக் 3:14,16)
2. இருதயத்திலே விரோதம் (யாக் 3:14,16)
3. பெருமைப்பாராட்டக்கூடியது. (யாக் 3:14)
4. லௌகிக சம்பந்தமானது (யாக் 3:15)
5. ஜென்மசுபாவத்துக்குரியது (யாக் 3:15) (யாக் 3:15)
6. கலகமும், குழப்பமுமுடையது. (யாக் 3:16)
7. துர்ச்செயல்கள் உடையது. (யாக் 3:16)

கசப்பான வைராக்கியம் **(Bitter envying) - ζῆλος - zeelos** - 2205

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் அல்லது ஆண்பால் பெயர்ச்சொல் - வைராக்கியம், பொறாமை, ஜாக்கிரதை, கோபாக்கினை, வெறுப்பு

7. தெய்வீக ஞானத்தின் ஒன்பது அடையாளங்கள்

யாக் 3:17 பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாத மில்லாத தாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.

யாக் 3:18 நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.

பரத்திலிருந்து வருகிற ஞானத்தின் தன்மைகள்

1. சுத்தமுள்ளது.
2. சமாதானமுள்ளது (எபி 12:14)
3. சாந்தமுள்ளது
4. இணக்கமுள்ளது.
5. இரக்கத்தினால் நிறைந்தது.
6. நற்கனிகளால் நிறைந்தது (கலா 5:22-23)
7. பட்சபாதம் இல்லாதது (யாக் 2:1-10)
8. மாயமற்றது.

4 அதிகாரம்

IV. கடிந்துரைகளும் கட்டளைகளும் - (4:1-5:20)

1. பிரிவினைக்கு காரணம்

யாக் 4:1 உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினால்லவா?

"உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும்" - யாக்கோபு இந்த நிருபத்தை எழுதிய காலத்தில் யூதேயாவில் இருந்த யூதர்கள் ரோமப்பேரரசிற்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். தங்களுடைய மார்க்கத்தையும், பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக ரோமப்பேரரசோடு எதிர்த்து நின்றார்கள். யூதமார்க்கத்தாரில் ஒரு பிரிவினர் ரோமப்பேரரசிற்கு எதிராக முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்கள். ஒருசில பிரதேசங்களில் யூதர்கள் புறஜாதியாரில் திரளான ஜனங்களைக் கொன்று, தங்களுக்கு அழிவை வருவித்துக் கொண்டார்கள். பேராசையினாலும், வைராக்கியத்தினாலும் யுத்தங்களும், சண்டைகளும் உண்டாயிற்று. தங்களுடைய யூதமார்க்கத்தைப் புறஜாதியார் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னும் வைராக்கியத்தில் அவர்களோடு சண்டையிட்டு, யுத்தம்பண்ணி, அவர்களுடைய விக்கிரகாராதனைகளை அழிக்க முயற்சி பண்ணினார்கள்.

2. பின்வாங்கிப்போனவர்களின் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காமல் இருப்பதற்கு ஐந்து காரணங்கள்

யாக் 4:2 நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர் களாயிருந்தும், அடையக்கூடாமற் போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.

யாக் 4:3 நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிற படியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்.

விண்ணப்பம் பண்ணியும் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்குக் காரணங்கள்

1. இச்சைகள் (Lusts) (யாக் 4:1, 2, 3, 5; யோவான் 8:44)
2. கொலைசெய்தல் (Murders) (யாக் 4:2)
3. பேராசை (Covetousness) (யாக் 4:2)
4. யுத்தங்களும், சண்டைகளும் (Fighting and war) (யாக் 4:2)
5. இச்சைகளை நிறைவேற்றும்படி விண்ணப்பம் பண்ணுதல் (Asking amiss to satisfy lusts) (யாக் 4:3) (யாக் 4:3)
6. விபச்சாரம் (Adulteries) (யாக் 4:4)
7. உலக சிநேகம் (Friendship)
8. பெருமை (Pride) (யாக் 4:6)
9. தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுதல் (Rebellion against God) (யாக் 4:7)
10. பின்மாற்றமும், பாவமும் (Backsliding and sin) (யாக் 4:8)
11. இருமனமுள்ளவர்களாகச் சந்தேகத்துடன் இருப்பது (Double mindedness, doubt) (யாக் 4:8)
12. நாவைத் தவறாகப் பயன்படுத்துவது (Misuse of the tongue) (யாக் 4:11-12)

4 அதிகாரம்

தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணும் போது தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் பெற்றுக் கொள்ளலாம் என்று விசுவாசிக்க வேண்டும். (யோவான் 15:7; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8).

3. உலகத்திற்கு சிநேகிதனாய் இருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான் - (1யோவான் 2:15; ரோமர் 12:2; யோவான் 15:18)

யாக் 4:4 விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோத மான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகித னாயிருக்க விரும்புகிறவன் தேவனுக் குப் பகைஞனாகிறான்.

யாக் 4:5 நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயி ருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?

யாக் 4:6 அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர் களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.

விசுவாசிகளிடம் காணப்பட வேண்டிய சுபாவங்கள்

1. இப்பிரபஞ்சத்தின் கவலைகளிலிருந்து விடுதலை பெற்றிருக்க வேண்டும். (மத் 13:22; லூக்கா 21:34-36)
2. தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தி, உலக சந்தோஷத்தை நாடக்கூடாது. (மத் 16:26)
3. மற்றவர்களை அவிசுவாசிகள் போல குற்றப்படுத்தக்கூடாது (மத் 18:7)
4. உலகத்திற்குரியவர்களாக இருக்கக் கூடாது. (யோவான் 15:19; யோவான் 17:14,16)
5. இந்த உலகத்தில் தன் ஜீவனை சிநேகிக்கக்கூடாது. (யோவான் 12:25)
6. இப்பிரபஞ்சத்தினின்று விடுவிக்கப் பட்டிருக்க வேண்டும். (கலா 1:4)
7. உலகம் சிலுவையில் அறையுண்டிருக்க வேண்டும். (கலா 6:14)
8. உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்க வேண்டும். (பிலி 2:14)
9. லௌகீக இச்சைகளை வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவிக்க வேண்டும். (தீத்து 2:12)
10. உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். (யாக் 1:27)
11. உலக சிநேகம் இருக்கக்கூடாது. (யாக் 4:4)
12. உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பியிருக்க வேண்டும். (2பேதுரு 1:4; 2பேதுரு 2:20)
13. உலகத்திலும், உலகத்திலுள்ளவை களிலும் அன்புகூரக்கூடாது. (1யோவான் 2:15-17)
14. உலகத்தில் இயேசு கிறிஸ்து இருக்கிற பிரகாரமாக இருக்க வேண்டும். (1யோவான் 4:17)
15. உலகத்தை ஜெயிக்க வேண்டும். (1யோவான் 5:4-5)
16. உலகத்திலிருந்து தெரிந்து கொண்ட வர்களாக இருக்க வேண்டும். (யோவான் 15:19; யோவான் 17:6)
17. இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது. (ரோமர் 12:2)
18. உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்திருக்க வேண்டும். (கொலோ 2:20)

4 அதிகாரம்

"நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார்" - என்று வேதவாக்கியம் சொல்வதாக யாக்கோபு எழுதியிருக்கிறார். இது எந்த வேதவாக்கியம் என்று தெளிவாகத் தெரியவில்லை. இந்தக் கருத்து பல வசனங்களில் உள்ளது. (ஆதி 6:5; ஆதி 8:21; எண் 11:29; நீதி 21:10)

"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" - நீதி 3:34 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

4. ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கு பதினொறு நிபந்தனைகள் - (வசனம் 2-3)

யாக் 4:7 ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

யாக் 4:8 தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்த மாக்குங்கள்.

யாக் 4:9 நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக் கடவது.

யாக் 4:10 கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள்; அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

பின்மாதிப்போனவர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் (யாக் 4:7)
2. பிசாசிற்கு எதிர்த்து நில்லுங்கள். (யாக் 4:7)
3. தேவனிடத்தில் சேருங்கள் (யாக் 4:8)
4. உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள். (யாக் 4:8)
5. உங்கள் இருதயங்களைப் பரிசுத்த மாக்குங்கள். (யாக் 4:8)
6. துயரப்பட்டு, துக்கித்து அழுங்கள். (யாக் 4:9)
7. உங்கள் நகைப்பு துக்கிப்பாக மாறக்கடவது. (யாக் 4:9)
8. உங்கள் சந்தோஷம் சஞ்சலமாக மாறக்கடவது. (யாக் 4:9)
9. கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப் படுங்கள். (யாக் 4:10)
10. ஒருவருக்கொருவர் விரோமாய் பேசாதிருங்கள். (யாக் 4:11)

பின்மாதிப்போனவர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள்

1. தாழ்மையுள்ளவருக்குத் தேவன் அதிகமான கிருபையை அளிக்கிறார்.
2. பிசாசிற்கு எதிர்த்து நிற்கும்போது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.
3. தேவனிடத்தில் சேரும்போது அவர் உங்களிடத்தில் சேருவார்.
4. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படும்போது அவர் உங்களை உயர்த்துவார்.

வாக்குத்தத்தங்கள் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேற வேண்டுமானால் நாம் அதற்குரிய நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

"உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்" - பரிசுத்தம், குற்றமற்ற தன்மை ஆகியவற்றிற்குக் கைகளைக் கழுவுதல் ஓர் அடையாளமாகும். (மத் 27:24).

பரிசுத்தமாக்குதல் **(purify)** - **ἁγνίζω - hagnizoo - 48**

4 அதிகாரம்

வினைச்சொல் - சுத்திகரிப்புச்செய், சுத்தமாக்கு, சுத்திகரி, சுத்திகரித்துக் கொள் **(to make pure)** (யாக் 4:8; யோவான் 11:55; அப் 21:24,26; அப் 24:18; 1பேதுரு 1:22; 1யோவான் 3:3) - உலகத்திலிருந்து வேறுபிரிந்து எல்லாப் பாவங்களையும் அறிக்கை செய்து அவைகளை விட்டு விட்டு தேவனிடத்திற்கு வருதல்.

"இருமனமுள்ளவர்கள்" - தேவனைச் சந்தேகப்படுகிறவர்களைக் குறிக்கும் வாக்கியம். (யாக் 1:6-8).

"நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்" - தேவனுடைய சமூகத்தில் நாம் செய்த பாவங்களுக்காகத் துயரப்பட்டு, துக்கித்து அழும்போது தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம். (1யோவான் 1:7; எபி 9:27).

பாவம், பாவசந்தோஷம் ஆகியவற்றின் வகைகள்

1. யுத்தங்களும் சண்டைகளும் (யாக் 4:1-2)
2. பாவஇச்சைகள் (யாக் 4:1-5; எபே 2:1-3)
3. கொலைகள் (யாக் 4:2)
4. இச்சித்தல் (யாக் 4:2)
5. விபச்சாரம் (யாக் 4:4)
6. உலக மனுஷரோடு சிநேகம் (யாக் 4:4)
7. பொறாமைகள் (யாக் 4:5)
8. பெருமை (யாக் 4:6-10)
9. பாவத்தில் நகைத்தல் (யாக் 4:9)
10. பாவத்தில் சந்தோஷப்படுதல் (யாக் 4:9)

"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப் படுங்கள்; அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" - துக்கித்து, அழுகிறவர்களும், துயரப் படுகிறவர்களும் தரையில் படுத்து புழுதியில் உருண்டு தங்களுடைய பாவங் களுக்காக மனம்வருந்தி அழுவார்கள். அவர்கள் பாவம் மன்னிக்கப்படும்போது அவர்கள் தரையிலிருந்து எழும்பி, தூய்மையான வஸ்திரங்களைத் தரித்துக் கொள்வார்கள்.

5. தன்னைத்தான் நியாயாதிபதியாக்கிக்கொள்கிறவன் மீது கடிந்துரை - (3:1; மத் 7:1-5)

யாக் 4:11 சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப் படுத்துகிறவன் நியாயப்பிரமாணத் திற்கு விரோதமாய்ப் பேசி நியாயப் பிரமாணத்தைக் குற்றப்படுத்து கிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப் பிரமாணத்தின்படி செய்கிறவனா யிராமல், அதற்கு நியாயாதிபதி யாயிருப்பாய்.

யாக் 4:12 நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர், மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்?

ஒருவருக்கு விரோதமாய்ப் பேசுதல் (Speak) - **καταλαλέω** - katalaleoo - 2635

வினைச்சொல் - விரோதமாய்ப்பேசு, விரோதமாய்சொல் **(to speak against; backbite; rail at; slander)** (யாக் 4:11; 1பேதுரு 2:12; 1பேதுரு 3:16) - யூதர்கள் மத்தியிலே காணப்பட்ட பல பிரிவினர்கள் ஒருவருக்கொருவர் விரோமாகப் பேசிக் கொண்டார்கள். மேலும் யூதமார்க்கத் திலிருந்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டோருக்கு விரோதமாகவும் அவர்கள் பேசினார்கள்.

"அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்" - தேவனே நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர். அவரால் மட்டுமே இரட்சிக்கவோ அல்லது அழிக்கவோ முடியும். இந்த அதிகாரம் தனக்கு வேண்டுமென்று கேட்க மனுஷருக்கு உரிமையில்லை. (யாக் 4:11-12).

4 அதிகாரம்

6. மனுஷ சித்தமும் ஆண்டவருடைய சித்தமும்

யாக் 4:13 மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம் பண்ணுவோ மென்கிறவர்களே, கேளுங்கள்.

யாக் 4:14 நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? யுகாஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே.

யாக் 4:15 ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.

யாக் 4:16 இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது.

"வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள்" - இந்த வாக்கியம் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் பிரயாணம் செய்து வியாபாரம் செய்வோருக்குக் கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 37:25).

"கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" - இந்த வாக்கியம் யாக் 1:10-11 ஆகிய வசனங்களில் யாக்கோபு ஐசுவரியவானைப் பற்றிக் கூறியிருப்பதைப் போல் உள்ளது.

"இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்" - வியாபாரம் செய்கிறவர்கள் ஒவ்வொரு ஊராகச் சென்று, தாங்கள் விற்றதையும், வாங்கியதையும் குறித்து மேன்மைபாராட்டுகிறார்கள். யாரும் மேன்மைபாராட்டக்கூடாது. நாம் ஒரு காரியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம்" (யாக் 4:15) என்று சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட வாக்கியம் தன்னுடைய பலத்தையும், பராக்கிரமத்தையும் நம்பாமல் தேவனிடத்திலும், அவருடைய பராமரிப்பிலும் விசுவாசம் வைப்பதைக் குறிப்பிடுகிறது. மேன்மைபாராட்டுவது எப்போதுமே தீய நோக்கமுடையது.

7. நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமல் போனால் அது அவனுக்கு பாவமாயிருக்கும் - (ரோமர் 3:20; 4:15; 14:23; 1யோவான் 3:4)

யாக் 4:17 ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

பாவம் (sin) - ἁμαρτία - **hamartia** - 266

பெண்பால் வினைப்பெயர் - பாவம், தோல்வி **(missing the mark) sin** (யாக் 4:16; மத் 1:21) **sinful** (ரோமர் 8:3); **offence** (2கொரி 11:7).

(அ) பாவச் செயல் (1கொரி. 15:17)

(ஆ) பாவத்தில் முங்கியிருத்தல். எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா. 1:21), (ரோம. 3:1)

5 அதிகாரம்

8. துன்மார்க்கமான ஐசுவரியவான்கள் மீது கடிந்துரை - ஏழு பாவங்களுக்கு ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு - (2:6-7; 1தீமோ 6:9-10; லூக்கா 12:15-21)

யாக் 5:1 ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்க ளினிமித்தம் அலறி அழுங்கள்.

யாக் 5:2 உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயின.

யாக் 5:3 உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவை களிலுள்ள துரு உங்களுக்கு விரோத மாகச் சாட்சியாயிருந்து, அக்கினி யைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்.

யாக் 5:4 இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப் பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர் களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்பட்டது.

யாக் 5:5 பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்.

யாக் 5:6 நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்துநிற்கவில்லை.

நிர்பந்தம் (miseries) - ταλαιπωρία - talaipooria - 5004

பெண்பால் பெயர்ச்சொல் - நிர்ப்பந்தம் (bodily hardships; misery) (ரோமர் 3:16)

நிர்ப்பந்தம் (misery) - ταλαίπωρος - talaipooros - 5005

பெயரடை - நிர்ப்பந்தமான, நிர்ப்பாக்கியமுள்ள (wretched) (ரோமர் 7:25; வெளி 3:17)

தீர்க்கதரிசன எண் - 1

"உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினி மித்தம் அலறி அழுங்கள்............" (யாக் 5:1-8) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறை வேறவில்லை.

துன்மார்க்கமான ஐசுவரியவான்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. அவர்கள்மேல் நிர்ப்பந்தங்கள் வரும். (யாக் 5:1)
2. ஐசுவரியங்கள் அழிந்துபோகும். (யாக் 5:2)
3. வஸ்திரங்கள் பொட்டரித்துப்போகும். (யாக் 5:2)
4. பொன்னும், வெள்ளியும் துருப்பிடிக்கும். (யாக் 5:3)
5. அவைகளிலுள்ள துரு அவர்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருக்கும். (யாக் 5:3)
6. அவைகளிலுள்ள துரு அக்கினியைப் போல அவர்கள் மாம்சத்தைத் தின்னும். (யாக் 5:3)

"உங்கள் ஐசுவரியம் அழிந்து.....போயின" - பொன்னும் வெள்ளியும் துருப்பிடிக்கும். ஐசுவரியம் அழியும். ஐசுவரியம் என்பது தானியங்கள், மந்தைகள், எண்ணெய், திராட்சைரசம் ஆகிய அனைத்தையும் குறிக்கும்.

அழிதல் (corrupt) - σήπω - seepoo - 4595

வினைச்சொல் - அழி (to make rotten; putrid; to fester, mortify)

5 அதிகாரம்

துருப்பிடித்தல் (cankered) - **κατιόω** - **katiooo** - 2728

வினைச்சொல் - மேற்கொள், பிடித்தல் **(rusted over)**

துரு **(rust)** - **ἰός** - **ios** - 2447

ஆண்பால் பெயர்ச்சொல் - விஷம், துரு **rust** (யாக் 5:3) **poison** (யாக் 3:8; ரோமர் 3:13) - மனுஷருடைய ஐசுவரியங்கள் அவர்களுடைய பேராசைக்கும், பண ஆசைக்கும் சான்றாகும். (லூக்கா 12:15)

"அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும்" - மனுஷனுடைய ஐசுவரியம் அவனுடைய துன்மார்க்கத்திற்குச் சான்று பகருகிறது. இது அக்கினியைப்போல அவர்களுடைய மாம்சத்தைத் தின்றுபோடுகிறது.

துன்மார்க்கமான ஐசுவரியவான்களின் பாவங்கள்

1. பூமியிலே ஐசுவரியத்தைச் சேர்க்கிறார்கள். (யாக் 5:3; மத் 6:19-21; லூக்கா 12:15-21)
2. வேலைக்காரரை அநியாயமாய் வஞ்சிக்கிறார்கள். (யாக் 5:4; லேவி 19:13; உபா 24:14-15; எரே 22:13; மல் 3:5)
3. பூமியில் மற்றவர்களுடைய உழைப்பில் சம்பிரமமாய் வாழ்கிறார்கள். (யாக் 5:5; மத் 23:14)
4. சுகபோகத்தில் உழன்று, ஜீவிக்கிறார்கள். (யாக் 5:5; ரோமர் 13:13; 1தீமோ 5:11; 2பேதுரு 2:18)
5. கொழுத்தவைகளை அடிக்கும் நாளிலே நடக்கிறதுபோல தங்கள் இருதயங்களைப் போஷிக்கிறார்கள். (யாக் 5:5)
6. நீதிமானை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார்கள். (யாக் 5:6; யாக் 2:1-10)
7. நீதிமானைக் கொலைசெய்து, தங்கள் ஐசுவரியத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள். (யாக் 5:6; 1இராஜா 21)

"சேனைகளுடைய கர்த்தர்" **(Lord of sabaoth)** - பழைய ஏற்பாட்டில் கர்த்தருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்களில் ஒன்று. தேசங்களை ஆளுகை செய்யவும், துன்மார்க்கரைத் தண்டிக்கவும் தேவன் சர்வ வல்லவராக இருக்கிறார். (1சாமு 1:3,11; 1சாமு 4:4; 1சாமு 15:2).

சம்பிரமமாய் வாழ்தல் **(to live softly)** - **τρυφάω** - **tryphaoo** - 5171

வினைச்சொல் - சம்பிரமமாய் வாழ் **(to live softly, delicately; fare sumptuously; live in luxury; to be effeminate; to be licentious; to revel)**

சுகபோகம் **(pleasure)** - **τρυφή** - **tryphee** - 5172

பெண்பால் பெயர்ச்சொல் - செல்வம், இன்பம் (லூக்கா 7:25; 2பேதுரு 2:13)

சுகபோகமாய் வாழ் **(wanton)** - **σπαταλάω** - **spatalaoo** - 4684

வினைச்சொல் - சுகபோகமாய் வாழ் **(to live riotously, in pleasure)** (யாக் 5:5; 1தீமோ 5:6)

போஷித்தல் **(nourished)** - **τρέφω** - **trephoo** - 5142

வினைச்சொல் - போஜனங்கொடு, பிழைப்பூட்டு, போஷிக்கப்படு **nourish** (யாக் 5:5; அப் 12:20; வெளி 12:14); **feed** (மத் 6:26; மத் 25:37; லூக்கா 12:24; வெளி 12:6); **bring up** (லூக்கா 4:16) - பண்டிகை நாட்களில் ஏராளமான மிருகங்களைப் பலியிட்டு, அவைகளைப் புசித்து, திருப்தியடைந்திருப்பார்கள். அதுபோன்று போஷிக்கப்படுதல்.

நிர்ப்பந்தம் **(misery)** - **ταλαίπωρος** - **talaipooros** - 5005

யாக்கோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

9. கர்த்தரின் வருகையைக் குறித்த ஆலோசனை

யாக் 5:7 இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்.

யாக் 5:8 நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.

யாக் 5:9 சகோதரரே, நீங்கள் நியாயந் தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்.

"கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்" - சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வருவதை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வாக்கியம் குறிப்பிடவில்லை. (யாக் 5:7-8; யோவான் 14:1-3; லூக்கா 21:34-36; 1கொரி 15:23, 51-58; 2கொரி 5:1-8; எபே 5:27; பிலி 3:11, 20-21; 1தெச 2:19; 1தெச 3:13; 1தெச 4:13-17; 1தெச 5:9,23; 2தெச 2:1,7லி8; கொலோ 3:4; 1யோவான் 2:28; 1யோவான் 3:2; 1பேதுரு 5:4).

"முன்மாரியும் பின்மாரியும்" - பாலஸ்தீன தேசத்தில் முன்மாரியும், பின்மாரியும் பெய்யும். விதைப்புக் காலத்தில் முன்மாரியும், அறுப்புக் காலத்தில் பின்மாரியும் பெய்யும். (உபா 11:14) இந்த வசனத்தில் இந்த வாக்கியம் ஆத்தும அறுவடையின் கனியைக் குறிப்பிடுகிறது. சபை ஸ்தாபிக்கப்பட்டபோது ஆவிக்குரிய முன்மாரி பொழிந்தது. (அப் 2:1-16) இந்தக் காலத்தின் முடிவில் ஆவிக்குரிய பின்மாரி பொழியும். சபை காலத்தின் முடிவில் ஆத்துமாக்கள் பரிபூரணமாக அறுவடை செய்யப்பட்டு, கூட்டிச் சேர்க்கப்படும். (அப் 2:16-21; ஓசி 6:3; சக 10:1).

விரோதமாய் முறையிடுதல் (Grudge) - στενάζω - stenazoo - 4727

வினைச்சொல் - பெருமூச்சுவிடு, தவி, விரோதமாயிரு, துக்கத்தோடிரு (groan, murmur) (ரோமர் 8:23)

10. யோபின் பொறுமை

யாக் 5:10 என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.

யாக் 5:11 இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே.

துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் எடுத்துக்காட்டானவர்கள்

1. யோசேப்பு (Joseph) (ஆதி 37:8-36; ஆதி 39:1-41:44)
2. மோசே (Moses) (எண் 12:1; எண் 16:2-4)
3. தாவீது (David) (1சாமு 18:1-26:25; 2சாமு 15)
4. எலியா (Elijah) (1இராஜா 17:1-19:18)
5. எரேமியா (Jeremiah) (எரே 11:21; எரே 37:15)
6. யோபு (Job) (யோபு 5:11; யோபு 1-2)
7. மேலும் அநேகர் (Many others) (எபி 11:32-40)

யாக்கோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

"கர்த்தருடைய செயலின் முடிவு" (end of the Lord) - சரீரத்தில் நோயும், வியாதியும் வரும்போது நம்மில் அநேகர் யோபுவை ஒரு முன்மாதிரியாகக் கூறுகிறோம். கர்த்தர் யோபுவை ஒருசில மாதங்கள் மட்டுமே சோதித்தார். தான் சோதிக்கப்பட்ட நாட்களிலெல்லாம் யோபு தன்னுடைய மீட்புக்காகப் போராடினான். கர்த்தருடைய செயலின் முடிவே மிகவும் முக்கியமானது. ஏனெனில் கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார். அவருடைய செயலின் முடிவு மிகுந்த உருக்கமுள்ள தாயும், இரக்கமுள்ளதாயும் நமது ஆத்துமா விற்குப் பிரயோஜனமுள்ளதாயும் இருக்கும்.

11. சத்தியம் பண்ணுதல் - *(மத் 5:33-37; சங் 15:6; 76:11)*

யாக் 5:12 விசேஷமாய், என் சகோதரரே, வானத்தின்பேரிலாவது, பூமியின் பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது சத்தியம் பண்ணாதிருங்கள்; நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாத படிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக் கடவீர்கள்.

"சத்தியம் பண்ணாதிருங்கள்" - வானத்தின் பேரிலாவது, பூமியின்பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது நாம் சத்தியம் பண்ணக் கூடாது. யூதரும், அரபியரும் சத்தியம் பண்ணுவதில் வல்லவர்கள். அவர்கள் வானத்தின் பேரிலும், பூமியின் பேரிலும், எருசலேமின் பேரிலும் தேவாலயத்தின் பேரிலும், பலிபீடத்தின் பேரிலும் சத்தியம் பண்ணுவார்கள். சாதாரண காரியத்தைக் கூறும்போது கூட அதைச் சத்தியம் பண்ணி உறுதிபண்ணுவார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட துன்மார்க்கமான பழக்கம் இருந்ததினால்தான் யாக்கோபு இந்த வசனத்தில் "சத்தியம் பண்ணாதிருங்கள்" என்று அறிவுரை கூறுகிறார்.

கபடம் (hypocrisy) - ὑπόκρισις - **hypokrisis** - 5272

பெண்பால் பெயர்ச்சொல் - மாயம், கபடம் *(கலா 2:13)* - சத்தியம் பண்ணுகிறவர்கள் தங்கள் வாயினால் சத்தியம் பண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயமோ அவர்கள் சத்தியம் பண்ணிய வார்த்தைக்கு வெகுதூரத்தில் உள்ளது. சத்தியத்தை மாய்மாலமாகவும், கபடமாகவும் செய்கி றார்கள்.

12. துன்பப்படுகிறவனும் வியாதிப் பட்டவனும் செய்ய வேண்டிய காரியம்

யாக் 5:13 உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்.

யாக் 5:14 உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக் காக ஜெபம் பண்ணக்கடவர்கள்.

துன்பப்படுதல் (afflicted) - κακοπαθέω - **kakopatheoo** - 2553

வினைச்சொல் - தீங்கநுபவி, துன்பத்தை அனுபவி, துன்பப்படு (**endure hardness**) *(2தீமோ 2:3)*; **suffer trouble** *(2தீமோ 2:9)*; **endure afflictions** *(2தீமோ 4:5)*; **to be afflicted** *(யாக் 5:13)* - வியாதி மட்டும் என்றல்லாமல் இந்த வார்த்தை எந்தத் துன்பத்தையும் குறிப்பிடும்.

வியாதி (sick) - ἀσθενέω - **astheneoo** - 770

வினைச்சொல் - வியாதியாயிரு, வியாதியாய்கிட, வியாதிப்பட்டிரு, பிணியாளியாயிரு, பலவீனமாயிரு (**weak, feeble, sick**) *(பிலி 2:16-27)*.

5 அதிகாரம்

வியாதிப்பட்டவன் யாக் 5:14-15 ஆகிய வசனங்களின் பிரகாரம் செய்ய வேண்டிய காரியங்கள்

1. சபையின் மூப்பர்களை வரவழைக்க வேண்டும்.

2. அவன் பாவம் செய்திருப்பானானால் தன் குற்றங்களை அறிக்கையிட்டு ஜெபிக்க வேண்டும்.

மூப்பர் (elders) - πρεσβύτερος - presbyteros - 4245

பெயரடை - முன்னோரான, மூப்பரான, முதிர் வயதுள்ள (அப் 14:23).

சபையின் மூப்பர்கள் வியாதிப் பட்டவனுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள்

1. வியாதிப்பட்டவனுக்காக ஜெபிக்க வேண்டும். (யாக் 5:14)

2. அவனுக்கு எண்ணெய் பூசவேண்டும். (யாக் 5:14)

3. கர்த்தருடைய நாமத்தை அழைக்க வேண்டும். (யாக் 5:14)

4. விசுவாசமுள்ள ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். (யாக் 5:15)

எண்ணெய்பூசுதல் (anointing) - ἀλείφω - aleiphoo - 218

வினைச்சொல் - எண்ணைப்பூசு, பரிமளத்தைலயம் பூசி, சுகந்த வர்க்கமிடு, பூசு (anoint) (யாக் 5:14; மத் 6:17; மாற்கு 6:13; மாற்கு 16:1; லூக்கா 7:38,46; யோவான் 11:2; யோவான் 12:3).

"எண்ணெய்" - யூதர்கள் தங்களுடைய பிரயாணத்தின்போது தங்களோடு ஒலிவ எண்ணெயை எடுத்துச் செல்வது வழக்கம். தங்களுடைய சரீரங்களில் பூசுவதற்காகவும், காயங்களிலும், தழும்புகளிலும் தடவுவதற்காகவும் யூதர்கள் ஒலிவ எண்ணெயைப் பயன்படுத்தினார்கள். (லூக்கா 10:34) தேவன் பரிசுத்த ஆவியானவரால் சொஸ்தமாக்குவார் என்பதற்கு ஒலிவ எண்ணெயைப் பூசுதல் ஓர் அடையாளமாகும். (மாற்கு 6:13) எல்லா வியாதிகளையும் ஒலிவ எண்ணெய் குணமாக்காது. கர்த்தருடைய கிருபையே நோய்களைக் குணமாக்கும்.

13. விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் - (மத் 8:17; 1பேதுரு 2:24; யாத் 15:26; சங் 91; 103:3; ஏசா 53:4-5; 58:8)

யாக் 5:15 அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

யாக் 5:16 நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

"விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" - ஒலிவ எண்ணெய் அல்ல. விசுவாசமுள்ள ஜெபமே நோயாளியைக் குணப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் விசுவாசமுள்ள ஜெபம் ஏறெடுக்கும்போது கர்த்தர் வியாதியஸ்தனை எழுப்புவார். அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். இந்த வாக்குத்தத்தமானது சபையின் மூப்பர்களுக்கு மட்டும் என்று கொடுக்கப்படாமல் எல்லா விசுவாசிகளுக்குமே கொடுக்கப் பட்டிருக்கிறது. (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26).

"கர்த்தர் அவனை எழுப்புவார்" - இது தான் தெய்வீக சுகமாதல். கர்த்தர்தான் வியாதியஸ்தர்களை எழுப்புகிறவர். மனுஷர் கர்த்தரிடத்தில் ஜெபிக்க மட்டுமே முடியும்.

யாக்கோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

"அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" - பாவமன்னிப்பும், சுகமாதலும் இணைந்து நடைபெறும் காரியங்களாகும். (மத் 9:5; மத் 13:15; அப் 3:16; அப் 4:12; அப் 28:27).

சரீரம் சொஸ்தமடையும்படிக்கும் செய்ய வேண்டிய காரியங்கள்

1. உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுங்கள்.

2. ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் (மத் 18:19; மத் 21:22; மாற்கு 11:24)

குற்றங்கள் (faults) - παράπτωμα - paraptooma - 3900

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தப்பிதம், பாவம், தவறு, குற்றம், அக்கிரமம், மீறுதல் **(a falling aside when one should have stood upright; a transgression; a moral fall)** (ரோமர் 11:11).

வியாதியும் சொஸ்தமடைவதும்

1. மனுஷன் பாவம் செய்வதற்கு முன்பாக ஆரோக்கியம் இயற்கையாகவும், நித்தியமானதாகவும் இருந்தது. (ஆதி 1:26-31; ஆதி 2:17)

2. பாவத்தின் விளைவினாலே மரணமும், வியாதியும் உண்டாயிற்று. இது சாத்தானால் எல்லோருக்கும் பரப்பட்டு வருகிறது. (ரோமர் 5:12-21; யோபு 2:6-7; லூக்கா 13:16; யோவான் 10:10; அப் 10:38; 1யோவான் 3:8).

3. மீட்பைப் பற்றிய முதலாவது தீர்க்கதரிசனத்திலும், வாக்குத்தத்தத்திலும் சரீர சுகமாதல் அடங்கியிருக்கிறது. (ஆதி 3:15; ஏசா 53:5; மத் 8:16-17; 1பேதுரு 2:24).

4. வேதாகமத்தில் முதலாவது குறிப்பிடப்பட்டிருக்கும் வியாதி மனுஷனுடைய தவறான செய்கையின் விளைவினால் உண்டாயிற்று. (ஆதி 20:1-18).

5. வேதாகமத்தில் முதலாவது குறிப்பிடப்பட்டிருக்கும் சரீர சுகமாதல் ஒரு தீர்க்கதரிசியின் ஜெபத்தின் மூலமாக உண்டாயிற்று. (ஆதி 20:7-17).

6. தேவன் தம்முடைய ஜனங்களோடு அவர்களைக் குணப்படுத்துவதாக உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார். (யாத் 15:26; யாத் 23:23; லேவி 26; உபா 28; மத் 8:17; 1பேதுரு 2:24; யாக் 5:14).

7. தேவன் தம்முடைய உடன்படிக்கைகளை எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கிறார். ஆவிக்குரிய உபாயங்கள் மூலமாகத் திரளான ஜனங்களைக் குணப்படுத்தியிருக்கிறார். (சங் 103:3; சங் 105:37; சங் 107:20; அப் 10:38).

8. ஆவிக்குரிய பிரகாரமாகக் குணப்படுத்துவது என்பது தேவன் வாக்குத்தத்தம் பண்ணிக் கட்டளையிட்டிருக்கும் அனைத்தையும் குறிப்பிடும். (யாத் 15:25; சங் 91; ஏசா 58; மத் 8:17; மத் 13:15; யாக் 5:14-16; 1பேதுரு 2:24).

9. ஆவிக்குரிய உபாயங்களை இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பயன்படுத்தினார்கள். (யாத் 15:26; எண் 11:1-3; எண் 12:13-16; எண் 21:1-9; யோவான் 3:14).

10. கீழ்ப்படிதல் என்னும் நிபந்தனையிலேயே சரீர சுகமாதல் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. (லேவி 26; உபா 28; யாத் 15:26; சங் 91; ஏசா 58; யாக் 5:14-15).

11. பாவிகளுக்குத் தண்டனை கொடுத்து, அவர்களை மனந்திருந்த வைப்பதற்காகவும், தம்முடைய பிள்ளைகள் தம்மை விட்டு வழிவிலகிச் செல்லும்போது அவர்களைத் தம்மிடம் திரும்ப அழைத்து வருவதற்காகவும், மனுஷருக்கு வியாதியைக் கொடுக்க தேவன் சாத்தானுக்கு அனுமதி கொடுக்கிறார். (யோபு 33:12-30; சங் 38; சங் 103:3; எண் 12:13-16; எண் 21:9; 1கொரி 5:1-5; 2கொரி 2:6-11; கலா 6:7-8).

யாக்கோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

12. மனுஷர் தாங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களைப் படித்து, மனந்திரும்பிய பின்பு தேவன் அவர்களைக் குணப்படுத்துகிறார். (ஆதி 20:7,17; எண் 11:2; எண் 12:13-16; எண் 21:1-9; யோபு 33:12-30; யோபு 42:1-12; சங் 103:3; யாக் 5:14-15).

13. தேவன் கூறியிருக்கும் நிபந்தனைகளை மனுஷர் கைக்கொள்ளும் போது சரீர ஆரோக்கியமும், சரீர சுகமாதலும் வாக்குப்பண்ணப்படுகிறது. (யாத் 15:26; லேவி 26; உபா 28; சங் 91; நீதி 3:1-8; நீதி 12:18; நீதி 13:3; நீதி 15:4;நீதி 18:8,21; ஏசா 58; யாக் 5:14;1பேதுரு 3:10-11; 3யோவான் 1:2).

14. பாவத்திலிருந்தும், வியாதியிலிருந்தும் மனுஷரை இரட்சிக்க கிறிஸ்து இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். (ஏசா 53; ஏசா 61:1-2; மத் 8:17; மத் 9:5; கலா 3:13; ரோமர் 8:11; அப் 10:38; 1பேதுரு 2:24; 1யோவான் 3:8).

15. சரீர சுகமாதல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகும். (ஏசா 35; ஏசா 53; ஏசா 61:1-2; மத் 8:17; அப் 10:38; 1பேதுரு 2:24; மத் 13:15).

16. எல்லா வியாதியஸ்தரையும் சொஸ்தமாக்கி, தாம் தேவனுடைய குமாரன் என்பதை இயேசு கிறிஸ்து நிரூபித்தார். (மத் 4:23-24; மத் 11:3-6; லூக்கா 4:16-21; அப் 10:38; 1யோவான் 3:8).

17. இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டு, அனுப்பப்பட்ட எல்லாச் சீஷர்களுக்கும் குணமாக்கும் வல்லமை கொடுக்கப்பட்டது. (மத் 10:1-8; மாற்கு 6:7-13; லூக்கா 10:1-21; அப் 1:8).

18. புறப்பட்டுப் போவதற்கு முன்பாகச் சுகமாக்கும் வல்லமையினால் நிரப்பப்பட வேண்டுமென்று இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். (லூக்கா 24:49; அப் 1:4-8).

19. ஆதி சீஷர்களுக்கு இயேசு கிறிஸ்து கொடுத்த அதே கட்டளையை இக்காலம் வரையிலுள்ள எல்லா சீஷர்களுக்கும் கொடுக்கிறார். (மத் 28:20; அப் 1:4-8; மாற்கு 16:15-20).

20. குணப்படுத்துதல் மூலமாக ஆதி சீஷர்கள் தேவனுடைய வார்த்தையை உறுதி பண்ணினார்கள். (மாற்கு 16:15-20; அப் 2:43; அப் 3:1-12; அப் 5:2-16; அப் 6:8; அப் 8:7-13; அப் 11:19-22; அப் 14:3,27; அப் 15:4,12; அப் 19:11-12; அப் 28:9; ரோமர் 15:18-19,29; 1கொரி 16:10; பிலி 1:7; 1தெச 2:13; எபி 2:3-4).

21. சுகமாக்கும் ஊழியத்தைச் செய்வதற்காகப் பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார். (அப் 1:1-8; அப் 2:33; 1கொரி 12; எபி 2:3-4).

22. தாம் செய்த கிரியைகளைச் செய்வதற்கு ஊழியக்காரர்களுக்கு மட்டும் என்றல்லாமல், எல்லா விசுவாசிகளுக்கும் வல்லமை கொடுப்பதாக இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணியிருக்கிறார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; அப் 1:4-8).

23. குணமாக்கும் வரங்களும், மற்ற வரங்களும் சபையின் ஆவிக்குரிய பக்திவிருத்திக்காக வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. (1கொரி 1:7; 1கொரி 12:1-11; ரோமர் 1:11; ரோமர் 12:6-8; ரோமர் 15:18-19,29; எபி 2:3-4).

24. வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்குவது சபையின் ஊழியத்தின் ஒரு பகுதியாகும். (மத் 10:1-8; லூக்கா 10:1-21; லூக்கா 24:49; அப் 1:1-8; 1கொரி 12; யாக் 5:14-16).

25. கிறிஸ்துவினுடைய பாவநிவாரண பலியினால் உண்டாகும் ஆசீர்வாதங்களின் ஒரு பாகமாக சரீர சுகமாதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 53:4-5; மத் 8:16-17; மத் 13:14-15; யோவான் 3:14; யோவான் 10:10; ரோமர் 1:16; ரோமர் 8:11; 1கொரி 11:23-32; கலா 3:13; யாத் 5:14-16; 1பேதுரு 2:24; 3யோவான் 1:2; யாத் 15:26; சங் 91; சங் 103:3).

யாக்கோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

26. சரீர சுகமாதல் பிள்ளைகளுடைய அப்பத்தின் ஒரு பகுதியாகும். மீட்பின் நீதியினால் தேவனுடைய பிள்ளைகளுக்கு இது வாக்குத்தத்த உரிமையாகக் கிடைத்திருக்கிறது. (மத் 7:7-11; மத் 15:22-28; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 13:16; யோவான் 3:14-16;யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; 1யோவான் 3:8, 20-22; 1யோவான் 5:14-15; 3யோவான் 1:2).

27. சரீர சுகமாதல் விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களில் ஒன்று. (மாற்கு 16:15-20).

28. சரீர சுகமாதல் பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கு மட்டுமென்று ஏற்படுத்தப்பட வில்லை. (யாத் 15:26; சங் 91; சங் 103:3) அதுபோலவே ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு மட்டுமென்றும் ஏற்படுத்தப் படவில்லை. (ஏசா 30:26; ஏசா 33:24; ஏசா 35:1-10). சரீர சுகமாதல் இக்காலத்திற்கும் உரியது. (மத் 8:17; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; 2கொரி 3:6-15; 1கொரி 12:1-11; எபி 2:3-4).

29. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மெய்யானவை என்பதைச் சரீர சுகமாதல் உறுதிபண்ணுகிறது. (2கொரி 1:20)

30. சரீர சுகமாதல் இரட்சிப்பின் ஒரு பகுதியாகும். இரட்சிப்பு என்னும் வார்த்தையைக் குறிக்கும் எபிரெய, கிரேக்க வார்த்தைகளில் மன்னிப்பு, சுகமாதல், ஆரோக்கியம், சாபத்திலிருந்து பரிபூரண விடுதலை ஆகிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. (ரோமர் 1:16; கலா 3:13; 1பேதுரு 2:24).

31. தேவன் தம்முடைய பிள்ளைகளைப் பராமரிப்பதன் ஒரு பகுதியாக சரீர சுகமாதல் இருக்கும் என்பதை விசு வாசிகள் எதிர்பார்க்கலாம். (மத் 6:10; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:1-13; லூக்கா 18:1-18; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:4-8; யாக் 5:14-16).

32. ஜெபத்தினாலும், விசுவாசத்தினாலும் பாவங்கள் மன்னிக்கப்படுவது போல இதே அடிப்படையிலேயே சரீர சுகமாதலும் உண்டாகிறது. (மத் 9:1-7; மத் 13:15; மத் 21:22; அப் 28:27; யாக் 1:4-8; யாக் 5:14-16; எபி 11:6).

33. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியையும் சரீர சுகமாதல் உறுதிபண்ணுகிறது. (அப் 1:4-8; அப் 2:33; அப் 3:16; அப் 4:12; ரோமர் 8:11).

34. சாத்தானுடைய வல்லமையை பூரணமாகத் தோற்கடிப்பதற்காகவும், சரீர சுகமாதலைக் கொடுப்பதற்காகவும் தேவையான எல்லாக் காரியங்களையும் தேவன் ஏற்கெனவே பராமரிப்பாகக் கொடுத்திருக்கிறார். (2கொரி 10:4-5; எபே 6:10-18; மாற்கு 16:15-20; யோவான் 14:12-15; யாக் 4:7; யாக் 5:14-16; 1பேதுரு 2:24; 1பேதுரு 5:7-9).

35. தம்முடைய பிள்ளைகளின் வியாதியைக் குணப்படுத்துவது தேவனுடைய சித்தம். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேத வசனங்கள் தம்முடைய பிள்ளைகளைத் தேவன் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை விளக்குகிறது. "நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவான் 15:7); "நீங்கள் விசுவாசமுள்ள வர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர் கள்" (மத் 21:22; யோவான் 14:12-15; யோவான் 15:16); "என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவான் 14:14); "தான் சொன்னபடியே நடக்குமென்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும்" (மாற்கு 11:22-24); "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில்வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா" (மத் 7:7-11).

யாக்கோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் தேவன் வியாதிகளைக் குணப்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை விட மேலான வாக்குத்தத்தங்களினால் உண்டானது. ஆகையினால் புதிய ஏற்பாட்டுக் காலத்து விசுவாசிகளாகிய நமக்கு வியாதிகள் வரும்போது தேவனிடத்தில் விசுவாசத்தோடு ஜெபித்தால் அவர் நம்மை நிச்சயமாகவே குணப்படுத்துவார். (எபி 8:6).

பெலனுள்ளது (effectual) - ἐνεργέω - energeoo - 1754

வினைச்சொல் - விளங்கச்செய், கையாளி, உண்டாக்கு, பலன் செய் (1தெச 2:13) -

14. ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் - (லூக்கா 11:1-13; 18:1-14; மத் 21:22)

யாக் 5:17 எலியா என்பவன் நம்மைப் போலப் பாடுள்ள மனுஷனா யிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை.

யாக் 5:18 மறுபடியும் ஜெபம் பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.

"எலியா" (Elias, Elijah) - மனுஷர்கள் எல்லோரும் ஒன்றுபோலவே இருக்கிறார்கள் என்பதை விளக்குவதற்காக யாக்கோபு எலியாவைப் பற்றி இங்கு கூறியிருக்கிறார். அற்புதங்கள் நடைபெறுவதற்காக நாம் ஜெபம் பண்ண வேண்டும். இதை வலியுறுத்துவதற்காகவே யாக்கோபு மழை பெய்த அற்புதத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். (யாக் 5:17-18; 1இராஜா 17:1; 1இராஜா 18:1,41-46).

15. சத்தியத்தை விட்டு விலகி மோசம் போவதும் இரட்சிக்கப் படுவதும் - (கலா 4:19; 6:1; 1யோவான் 1:9; 2:1-2; சங் 51; வெளி 3:5)

யாக் 5:19 சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால்,

யாக் 5:20 தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.

சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போனவனைப் பற்றிய காரியங்கள்

1. விசுவாசிகள் சத்தியத்தை விட்டு விலகிப்போவதற்கு வாய்ப்புள்ளது. (யாக் 5:19; லூக் 22:32)

2. சத்தியத்தை விட்டு விலகிப் போனவர்கள் மறுபடியும் தேவனிடத்தில் திரும்பி வருவதற்கு வாய்ப்புள்ளது. (யாக் 5:19-20; லூக்கா 22:32).

3. சத்தியத்தை விட்டு விலகிப்போன விசுவாசி பாவம் செய்தால் அவன் மறுபடியும் பாவியாகிறான். (யாக் 5:20; ரோமர் 6:14-23).

4. சத்தியத்தை விட்டு விலகிப்போகிறவன் பாவம் செய்யும்போது மரணம் அவனுக்கு மறுபடியும் சம்பளமாகக் கொடுக்கப் படுகிறது. (யாக் 5:20; எபே 18:24; ரோமர் 8:12-13; கலா 5:19-21).

5. சத்தியத்தை விட்டுவிலகிப்போகிறவன் தன்னுடைய பாவத்திலிருந்து இரட்சிக்கப்படும் போது அவன் தன் ஆத்துமாவை மரணத்தினின்று மறுபடியும் இரட்சித்துக் கொள்கிறான். (யாக் 5:20; 1யோவான் 1:9; 1யோவான் 5:16; வெளி 2:5).

6. சத்தியத்தை விட்டு விலகி மோசம் போனவன் மனந்திரும்பி மறுபடியும் இரட்சிக்கப்படும்போது அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு மூடப் படுகிறது. (யாக் 5:20; 1யோவான் 1:9; வெளி 2:5).

7. சத்தியத்தை விட்டு விலகி மோசம் போனவன் மனந்திரும்பவில்லை யென்றால் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை அவன் சந்திக்க வேண்டியது வரும். (யாக் 5:20; ரோமர் 6:14-23; ரோமர் 8:12-13; 2தீமோ 2:12; எசே 18:24; எபி 6:4-6, எபி 10:26-29, 2பேதுரு 2:20-21).